விலை 16 காசு.

அறப்போர்

வார இதழ்

ஆசிரியர் : அரங்கண்ணல்

ஒளி: 1, | சென்னை திருவள்ளுவர் ஆண்டு.:1992, ஐப்பசி 18:வெள்ளி 3-11-61 | கதிர்: 35

இருதயத்தில் நீ!

அரங்கண்ணல்

"உன் பெயர்?"

"தங்கம்!"

"வயது..."

"தெரியாது."

"அப்பா பெயர்?"

"தெரியாது..."

"அம்மா பெயர்!"

"தெரியாது..."

"என்ன! அப்பா அம்மா பெயர் கூடவாத் தெரியாது?"

"தெரிஞ்சிருந்தா நான் ஏன்யா இந்தத் தொழிலுக்கு வந்திருக்கப் போகிறேன்..."

"அப்ப! உனக்கு விருப்பமில்லாமலா இந்தத் தொழிலைச் செய்றே..."

"நானும் மனித சாதிதான். எனக்கும் மனசு என்று ஒன்றுண்டு வர்றவனுக்கும் போறவனுக்கும் சிரிச்சுப் பேச நான் என்ன மரமா?"

"ஆமா! உன் வீட்டுக் கூடத்திலே இவ்வளவு சாமிப் படங்கள் மாட்டியிருக்கியே? உனக்குக்கூட கடவுள் பக்தி உண்டா...!!"

"ஏன்? கடவுளுக்கும் எனக்கும் என்ன சண்டையா?"

"ஆமாப்! நீ செய்றது பாபம்னு உனக்குத் தெரியுமா?"

"பஞ்சமா பாதகங்களிலே ஒண்ணுன்னு எனக்குத் தெரியும். அதைவிடப் பெரிசு; என் பசிங்கிறதும் எனக்கு மத்தவங்களை விடத் தெரியும்..."

"பசிக்காக மனிதன் எதையும் சாப்பிட்டுவிட முடியுமா?"

"கத்தாழைக் கிழங்கைச் சாப்பிட்டுவிட்டு உயிரைவிட்டவங்க உண்டு, பசியாலே!"

"பசி பெரிசா! மானம் பெரிசா!!"

"என்னைப் போன்ற ஜென்மங்க உருவாகாமே யிருக்க வேண்டிய சமூகத்தை ஏற்படுத்தாமே இருக்கிற உலகத்துக்குத்தான் நானெல்லாம் இருக்கிறது அவமானமே ஒழிய, பசிக்காக கெட்ட வழியிலே போறது எனக்கு ஒண்ணும் அவமானமில்லே..."

"உங்களையெல்லாம் மனசிலே வச்சுத்தான் உலகத்திலேயே மோசமான பிறவி பெண் பிறவின்னு போன வாரம் அருளானந்த சாமியார், பஜனை மடத்திலே பேசினுர்..."

"ஆமாம்! கண்ணகியின் கற்புங்கிறதைப் பற்றிக் கூட அடுத்தநாள். ஜோராப் பேசினுர்',

"ஆமா! நீகூட இதுபோல நல்ல விஷயங்களைப்பற்றிப்பேசற இடங்களுக்குப் போறதுண்டா?"

"அதுபோன்ற இடங்களிலே தான்யா, என் வியாபாரமே ஆரம்பமாகுது..."

"என்ன?"

"திகைக்காதீங்க! கற்பின் மகிமையைப் பற்றிப் பேசின அன்னைக்கு இரவு, அருளானந்த அடிகள், இதோ இந்தக் கட்டிலிலே தான் வந்து கிடந்தார்..."

"நான் நம்பமாட்டேன்..."

"உங்களுடைய மூட நம்பிக்கையை நான் மெச்சுகிறேன். அதே சமயத்திலே, உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?"

"கேளேன்!"

"நீங்க போலீஸ்காரர்தானே"

"ஆமாம்! நம்பர் 304 ன்னு ஸ்டேஷன்லே சொல்லுவாங்க'

"திருடர்களைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"அபிப்பிராயம் என்ன இருக்கு அடித்து இழுத்துக்கொண்டு போய் ஜெயிலில் தள்ளனும்..."

"ஆனுல், எனக்குத் திருடர்கள் என்ருல் மிகவும் அனுதாபம்..."

"என்ன?"

"உலகத்திலேயே ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை பார்க்கிறவர்கள் திருடர்கள்! எல்லோரும் தூங்கி ஓய்வெடுக்கும்போது அவர்கள் உத்யோகம் ஆரம்பமாகிறது நல்ல சோஷியலிசவாதிகள். பணம் ஒரு இடத்தில் தேங்காமல், பார்த்துக்கொள்வது திருடர்கள்தான். திருடர்களிலே கூட யோக்கியமான அயோக்கியர்களை நான் பார்த்திருக்கிறேன்..."

"அதென்ன யோக்கியமான அயோக்கியர்கள்!"

"நிறைய உண்டு! முதலில் அயோக்கியமான யோக்கியர்களைப் பற்றிச் சொல்லுகிறேன். நல்லமுத்து இருக்கிருரல்லவா, நாடு எப்படி முன்னேற வேண்டும், தேசியத் தலைவர்கள் எதற்குப் பாடுபடுகிருர்கள் என்றெல்லாம் கூட்டங்களில் மேசையை அடித்துப் பேசுவாரே..."

"ஆமாம்! அடுத்த முறை மந்திரியாகக்கூட வருவார் என்கிருர்கள்.."

(9- ம் பக்கம் பார்க்க)

'காம்ரேட்' கட்சியில்!

அதென்னமோ! ஆச்சரியப் படத் தக்க வகையில் ஒன்றன் பின் ஒன்ருக, ரஷியாவிலிருந்து செய்திகள் வந்துகொண்டுள் ளன.

வொராஷிலாவ் துரோகி—மால டோவ் துரோகி—மாலேன்கோவ் துரோகி—என்று ஒரே துரோகக் குரலாகவே, கேட்கிறது, மாஸ் கோவிலிருந்து!!

பொதுவுடமைக்கு ஒரு எடுத் துக் காட்டு — உலகப்பாட்டா ளிகளுக்கு ஒரு வெற்றிச் சின்னம் என்று, இன்று கருதப்படுவது, ரஷியாவாகும். அங்கேயிருந்து வரும் சமீபச் செய்திகள், அங் கும் பல 'சம்பத்துக்கள்' உண்டு; அங்கும் கட்சிக்குள் கருத்து வேற்றுமைகள் உண்டு—அந்தக் கருத்து வேற்றுமைகள் ஆளை ஒழிக்கும் வரை செல்வதும் உண்டு—என்கிற உண்மைகளை உலகுக்கு உணர்த்துகின்றன!

இந்தச் செய்திகளைப் பார்க்கும் போது, ஏழை மக்களுக்காகப் பாடுபட்டு பலன் கண்ட இயக்கம் என்கிற வகையில் ஒரு நிமிடம் நமது நெஞ்சு துணுக்குறவே செய்கிறது. மாலடோவ்—மாலங் கோவ்—வொராஷிலாவ்— புல்கா னின்—இப்படி யாரார் குருஷே வால் பெரியவர்கள் என்று அறி முகப்படுத்தி வைக்கப்பட்டார் களோ, அவர்களையே துரோகி கள் என்ருல், உடன், ஒப்புவது 'காம்ரேடு'களுக்குச் சகஜமாயி ருக்கலாம்! நம்மால் முடியவில்லை!

குருஷேவ், ரஷ்ய பீடத்தை அலங்கரிக்க முற்பட்ட நாளன் றைய தினமே, ஆரம்பித்தார் ஸ்டாலின்மீது தாக்குதலை. உயி ரோடு இருந்த ஸ்டாலின் மீதல்ல! செத்தபிறகுதான் இத்தாக்குதல்!

அவர் செய்த தவறுகள் என்று அனந்தம் சொல்லப்பட்டாலும், கடந்த போரில் அவர் காட்டிய வீரமும் திறனும், உலகால் எளி தில் மறக்கமுடியாது. அப்படியே அவர் தவறிழைத்திருந்தாலும், இறந்த பிறகு, அவரோடு மூடி விடுதலே, முறை!!

இந்தக்கிழமையும், 'ஸ்டாலின் புராணம்' படிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய ஆற்றலின்மையின் வகைகள் பட்டியல்போட்டுத் தரப் பட்டுள்ளன.

ஸ்டாலின்! மாவீரர் லெனி னேடு உழைத்த ஒரு வீரர். லெனி னுக்குப் பிறகு, ரஷ்யாவைக் கட் டிக் காத்துப் பெருமைகள் பல உண்டாகக் காரணமானவர். வல் லரசுகளுக்கு வளையாமல், அமைந்த தொழிலாளரரசைப் பாதுகாத்தவர்—அவர்மீது எவ்வ ளவு குற்றங்கள் சுமத்தப்படினும் அவைகளை மீறி இக்குணதிசயங் கள் விளங்கும்.

அப்பேறபட்டவருடைய படங் கள் அகற்றப்பட்டன! சிலைகள் தூக்கப்பட்டன!! இங்குள்ள சில பேர், தத்தமது குழந்தைகளுக்கு 'ஸ்டாலின்' என்று வைத்திருந்த பெயரைக்கூட மாற்றினர். எத்த னையோ ஆண்டுகள், 'மாவீரர்' என்று உலகுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட ஒருவரின் பெயர், இறந்துபோய், இன்னெரு வரிடம் அதிகாரம் வந்த காரணத் தால், 'சாதாரணமாக்க'ப் பட்டது!

என்ருலும், இறந்தவருடைய உடல், ரசாயன முறையில் பதப் படுத்தப்பட்டு மாஸ்கோவிலுள்ள செஞ்சதுக்கத்தில், லெனினுடைய உடலுக்குப் பக்கத்தில், இத்தனை காலமும் வைக்கப்பட்டிருந்தது.

'இந்த மரியாதைக்குக்கூட அந்த நபர் உரியவரல்லர்' என்று சொல்லி, அந்தச் சடலத்தை ரஷ்ய அரசு, அப்புறப்படுத்தியி ருக்கிறது! அப்புறப்படுத்தியது மட்டுமல்ல, அவருடைய உடலை

இதே ரசாயன முறையில் தொடர்ந்து கெட்டுப் போகாமல் வைப்பதும்கூடாது.— ஒரு துரோ கிக்கு இவ்வளவு பெரிய மரியாதை தேவையில்லை — என்றும்கூடப் பேசப்பட்டிருக்கிறது!!—உண்மை யில் இதுகண்டு, உலகமே திகைக் கும்.

குருஷேவுக்கு எதிரான சதியா ளர்கள்—அவர்கள்மீது வழக்குத் தொடரப்படும்—இப்படியெல்லாம் செய்திகள் வருவது, கட்டுக்கோப் பானதென்று புகழப்படும் ரஷியக் கம்யூனிஸ்டு இயக்கத்துக் குள் ளேயே, கோளாறுகள் உள்ளன என்பதை விளக்கும்

கோளாறுகளின் காரணமாக, இறந்தோர்மீது பழி போடுதல், நல்லதுமல்ல! தேவையுமல்ல!! அதனல் அவருடன் சேர்ந்திருந்த போது, எவ்வளவு வஞ்சகமாகப் புகழ்ப்பாடிக் காலந்தள்ளினர்கள் இன்று எக்காளமெழுப்பும் தலை வர்கள், என்றே உலக மக்கள் உணர வாய்ப்பு ஏற்படும்.

வெறுப்பு கூடாதென்று உல கத்துக்குப் போதிக்க வேண்டிய 'பெரிய இடத்தில்' இருக்கும் ரஷி யாவிலிருந்து இப்படிப்பட்ட செய் திகள் வருவது, வருந்தத்தக்கதே! வரலாறு திரும்புமோ என்கிற அச்சத்தை அனைவருக்கும் தரத் தக்கதே!!

எந்தப்பெண்!!

அந்தக் கம்பெனிக்கு இரண்டு பேர் கூட்டாளிகள். ஒரு பெண் டைபிஸ்ட் வைப்பது பற்றி இருவருக்கும் மனஒற்றுமை வரவில்லை. வேலை கேட்டுவந்த மூன்று பெண்களை, ஒரு உள நூல் வல்லுநரிடம் கொண்டுபோய், அவர் யாரைச் சிபார்சு செய்கிருரோ அப்பெண்ணை வேலைக்கு வைப்பதென்று முடிவு செய்தனர். 'இரண்டும் இரண்டும் எத்தனை?' என்று முதல் பெண்ணைக் கேட்டார். 'நான்கு' என்று சொன்ளுள், அவள்.

இரண்டாவது பெண் 'இரண்டையும் இரண்டையும் சேர்த்தால் 22' என்ருள். மூன்ருவது பெண், 'நாலு என்றும் சொல்லலாம். 22 என்றும் சொல்லலாம். அவரவர் விருப்பம் அது' என்று சொன்ளுள். 'இந்த மூவரில் யாரை நீங்கள் விரும்புகிறீர்கள்?' என்று உளநூல் வல்லுநர் பங்காளிகளைக் கேட்டார். தனியாகப் போய் யோசித்துவிட்டுவந்த கூட்டாளி கள் தங்கள் முடிவைச் சொல்லினர். அவர்கள் யாரைத் தேர்ந்தெடுத்தார்கள்?

[illegible]

ஆசிரியருக்குக் கடிதங்கள்

கரூர்.

அன்புடையீர்,

திராவிட முன்னேற்றக் கழகத் தின் கொள்கைகளை விளக்கித் தேர்தல் பிரச்சாரம் செய்யும் குழு வொன்றை ஏற்படுத்தியுள்ளோம் கீழ்க்கண்ட முகவரிக்கு கழகத் தோழர்கள் தொடர்பு கொள்ளு மாறு எமது இசைக் குழுவின் சார்பில், உங்கள் மூலம் தெரி வித்துக் கொள்கிறேம்.

ப. சிங்காரவேலன்—விஜயா
இராதா தையல் நிலையம்,
ஆசுபத்திரி ரோடு, கரூர்.

ஃ ஃ ஃ

திருச்சி.

அன்புடையீர்;

திருச்சி நகர் சிந்தாமணி கடை வீதியில் இருக்கும் 'அண்ணு மருந் தகம்' என்ற அமைப்பானது, அந்தோனியார் தெரு, வெனிஸ் தெவு, கோரி மேட்டுத் தெரு, புதுத்தெரு, புதுவை நகர், சிந்தா மணி கிரவுண்ட், கடைவீதி ஆகிய இடங்களிலும் மற்றும் வெளியி டங்களிலும் வசிக்கும் ஏழை எளி யோர்கட்கு பகலிலும், இரவிலும் வைத்திய உதவி செய்துவருகி றது.

பண வசதியில்லா ஏழைகட்கு நோய் தீர்க்க வாய்ப்பில்லாத குறைநீக்க இம்மருந்தகம் சில ஆண்டுகளாகத் தன்னுலான உதவியைச் செய்து வருகிறது.

தங்களால் இயன்ற உதவியை இந்த நற்பணிக்குச் செய்யுமாறு தங்கள் மூலம் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேம்.

தொண்டன்,
தி.அ. அய்யாச்சாமி
திருச்சி-2
(அமைப்பாளன்)

ஃ ஃ ஃ

கரந்தை.

அன்புள்ளவரே!

ஏன் தாங்கள் எழுதிவந்த 'நாஜிசம்' தொடர் கட்டுரையை நிறுத்திவிட்டீர்கள்? மேயரின் சுற் றுப்பயணம் வருமென்று விளம்ப ரப்படுத்தி அதுவும்வராமல் நின்று விட்டதே?

நண்பன்
கலைமணி

['நாஜிசம்' தொடர் கட்டுரைக் குப் பதில் வேறெதாவது எழுதக் கூடாதா!—என்று பலர் எழுதி னர். 'ஈச்மென்' வரலாறு விபர மாக வந்ததால் இது இப்போது தேவையில்லை என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனக்கு நீதி பதி என் வாசகர்களே!! மேய ரின் கட்டுரையைப் போட எவ்வ ளவோ முயன்றேம் உட்கார்ந்து எழுதுமளவுக்குத் தோழர் முனு சாமியின் தொல்லைகள் இடந்தர வில்லை. காலமும் ஆகிவிட்டதால் கைவிட்டுவிட்டோம்]

—ஃ—

'மூக்கறுபட்டாள்' முணகல்!

வெற்றியா பெறவில்லை நாம்!

லூதுலி பாடம் அறிவீர்

உலகம் ஒரு நாள் வணங்கும்

புதுக் கட்சியைச் சேர்ந்த அரிப்பாளர்கள் கேட்கிறார்கள், "திராவிட முன்னேற்றக் கழகத்தார் எந்தப்போராட்டத்தில் என்ன வெற்றியைக் கண்டார்கள்?" என்று.

காங்கிரஸ் மந்திரிசபையிலிருக்கும் பதவிக் கொரிப்பாளரான நிதியமைச்சர் சுப்ரமண்யம் உடனே "கேள்! கேள்! என்ன ஆயிற்று தி. மு. க. வின் கல்லக்குடிப் போராட்டம்? எந்தப் போராட்டத்தில் வெற்றி கண்டார்கள்? வெற்றி காணாத கட்சி தி.மு.க." என்று ஆடுகிறார்.

தாளம் போட தையல் ஆடுவதுண்டு! அரசியலில்தாளம் போட ஒரு புதுக்கட்சி—உடனே, தாம் தீம் என்று குதிக்கிறது காங்கிரஸ் கட்சி!!

கல்லக்குடிப் போராட்டத்தில் 'தோல்வி' கண்டதாகவே இருக்கட்டும்—அதற்காக வெட்கப்பட வேண்டியவர்கள் யார்? தமிழ்நாடு என்று பெயர் வைக்க மறுத்து, தமிழ் மண்ணிலுள்ள ஒரு ஊருக்குத் தமிழ்ப் பெயரை வைக்கவும் முன்வராத ஆட்சியல்லவா வெட்கப்பட வேண்டும்?

"தி. மு. க. ஒருஊரின் பெயரை மாற்றச் சொல்லிற்று. நாங்கள் பத்து ஊருக்குப் பழகு தமிழ்ப் பெயரை வைத்திருக்கிறோம். பார்! பார்!! என்று சொன்னால் நாம் நாண வேண்டியதுதான். கையில் ஆட்சியிருக்கிறது என்கிற ஆணவத்தால் 'தமிழுக்கு' மதிப்பளிக்க மறுத்துவிட்டு அதை காரணமாகக் காட்டிக் கழகத்தை எள்ளி நகையாடுவதென்றால், சம்பத்துக்கு லாபமுண்டு, அய்யாவிடமும்காங்கிரசிடமும் ஆனால் சம்பத்து ஊருக்குட் பக்கத்துக் கோட்டத்தில் வாழும் அமைச்சருக்கென்ன லாபம்!!

குல தர்மக் கல்வித்திட்டத்தை ஆச்சாரியார் சொல்ல "அடியேன் ததாஸ்து!" என்று சொல்லி ஆட்டம் போட்டுக் கொண்டு வந்தவர் இதே நிதியமைச்சர்தான். ஆனால் நமது கிளர்ச்சியின் விளைவால்தானே அந்த வர்ணாசிரமத்திட்டம் ஒழிந்தது. மானமுள்ளவரானால் மறு மந்திரி சபையில் இடம் கிடைத்ததும் தோற்கவில்லை-துணிவோடு அதே சட்டத்தை இப்போதும் கல்விமந்திரியாகஇருக்கும் நான் கொண்டு வருகிறேன் என்றன்றோ சொல்லி யிருக்க வேண்டும்? அந்த நிபந்தனையுடன் தானே காமராசருடைய அழைப்பைப்பெற்றிருக்க வேண்டும்? மூக்கறுபட்ட மூக்காத்தாள் மூலையில் உட்கார்ந்து முணகினாளாம் என்பதுபோல தலையிலே குட்டுப்பட்ட இந்தச் சாமர்த்திய சாலி, திராவிட முன்னேற்றக் கழகம் எதில் வெற்றி பெற்றது என்கிறார்!!

"ஆண்டு பன்னிரெண்டாயிற்றே கழகம் ஏற்பட்டு. இன்னும் திராவிட நாடு கொண்டு வரவில்லையே, இது என்ன கழகம்?" என்று தேர்தல் காய்ச்சலில்வேகமாகப் பிதற்றினாலும் பிதற்றலாம் அமைச்சர்!

உதய சூரியன்

காத்திருந்தவன் பார்த்த பெண்ணை
நேத்து வந்தவன, கடத்திச் சென்ற
கதையைப் போலக் காங்கிரசாட்சியில்
கஷ்டம் தீரும் என்று ஏழை காத்திருக்கையில்
கள்ளமார்க்கட்காரன் வந்து அடித்தான்
கொள்ளை!! கையைத் தலையில் வைத்தழுதான்
உழைக்கும் ஏழை!
உழைத்தலுத்த உத்தமனே! அழுதது போதும்!
உதிக்குதுனக்காகவே 'உதய சூரியன்'
இன்ப ஒளி பெற்றிட நீ வாராய் என்று
அன்புடனே அழைத்திடுது, தி. மு. கழகம்

இதேபோல உப்புச் சத்தியாக்கிரகத்தின போதும், சட்டமறுப்பு போதும், அந்நியத் துணிப்புறக்கணிப்பின் போதும், காங்கிரஸ்காரர்களைப் பார்த்து ஏளனமாகத்தான் பேசினான் வெள்ளையன்! எந்தக் குழந்தையும் பிறந்ததுமே 'பி. ஏ' படித்துத் தேறிவிடாது—தத்தித் தவழ்ந்து, நடு நடுவில் வரும் 'மாந்தங்'களுக்கு ஈடு கொடுத்து தன் வலிவு பெற்றுத்தான் தன்னை வளர்த்தவர்களின் ஆசைகளை நிறைவேற்றும்!! அந்தவகையில் பார்த்தால் தி. மு. க. தன்னைப் பொறுத்தவரையில் வெற்றியா பெறவில்லை? வீணனும் வெறும் வாயை மெல்லுபவனும் தவிர யாரும் மறுக்கார்!!

தன்னைப் பொறுத்தவரையில் தி. மு. க.—கடந்த வாரம் நடந்த தஞ்சை நகரசபை தேர்தல்வரையில்—வெற்றி பெற்றிருக்கிறது, ஒரு சிலராகயிருந்த கழகம், நாலு லட்சம்உறுப்பினர்களைக்கொண்டு விளங்குகிறது. ஒருவர் இருவரைப் பெற்றிருந்தகழகம்சென்னை மாநகராட்சியையே இன்று ஆள்கிறது. சட்டசபையில் ஒருவருமே இல்லையென்கிற நிலைமாறி பத்துக்கு மேற்பட்டோர் என்கிற நிலைமையைப் பெற்றிருக்கிறது. கழகத்தார் இல்லாத பஞ்சாயத்து சங்கங்கள் இல்லவே இல்லை! இதெல்லாம் வெற்றியில்லாமல் பிறகென்ன?

ஒரு விடுதலை இயக்கத்தின் வெற்றி அதன் வளர்ச்சியிலிருக்கிறதே ஒழிய வம்பர்களின் தயவைப் பெறுவதில் அல்ல. காங்கிரசார் ஆரம்பத்தில் செய்த கிளர்ச்சிகளுக்கு ஆங்கிலேயன் 'சிரம்' தாழ்த்தியிருந்தால் இந்த மண்ணின் சுதந்திரம்கூட இன்னும் பல்லாண்டுகள் ஒத்திப் போடப் பட்டிருக்கக்கூடும். விடுதலை இயக்கத்தின் வேரிலே ஊற்றப்படும் நீர், ஆட்சியாளர் 'இல்லை, இல்லை' என்று மறுத்துக் கொண்டே யிருப்பதுதான்! அப்போதுதான் உணர்ச்சியும் எழுச்சியும் உருவாகும்!! அரசியல் அரிச்சுவடியான இதை அன்பர் சுப்ரமணியம் அறியாததுகுற்றமல்ல; ஈரோட்டு வாடை இழுக்கிறது அவரையும்.

* * *

'வெற்றி' எதுவும் பெறுவிட்டால் ஒரு இயக்கம் வாழவே கூடாதா? வாழவே முடியாதா? இதோ ஒருவர், மிகவும் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

1960-ம் ஆண்டு சமாதானப் பரிசுபெற்ற இலட்சிய வீரர்

மேலேயுள்ள படத்திலிருக்கும் 62 வயதுள்ள கிழவர்தான் இவ்விதம் அடக்க உணர்ச்சியோடு அறிவித்திருக்கிறார்! தென் ஆபிரிகாவிலுள்ள நீக்ரோக்களின் விடுதலை இயக்கப் பிதா இவர். கருப்பர்களை தென் ஆபிரிகாவில் வாழும் ஆங்கிலேயஅரசு படுத்தி வரும் பாட்டினை எதிர்த்துப் போராடி வருகிறார். "சாதிக்குற்றம் சாட்டி என்னையும் என் நண்பர்களையும் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தினார்கள்; வாயைத் திறந்து பேசுவது என்கிற அடிப்படைச் சுதந்திரத்தையும்அளிக்க மறுத்தார்கள்; அங்கே இங்கே நகர்வதற்குள்ள உரிமைகளையும் மறுத்தார்கள்.

நீதி நேர்மை என்று எங்கள் மனச்சாட்சி சொல்வதை நாங்கள் ஏற்பதுகூடத் தவறு எனத் தண்டிக்கப்பட்டோம்! இருந்தாலும் எங்கள் சுதந்திர உணர்ச்சியை அணைக்காமல் பாதுகாத்து வருகிறோம்!! என்று வெளியிடுகிறார் அவர்.

அதுவே பெரியசாதனையென்று கருதுகிறார் அவர்!

ஒரு விடுதலை இயக்கம் என்றால் சுயநலக்காரர்கள் பலர் வருவர்! எச்சிலுக்கு ஆசைப்படுகின்றவர்கள் நுழைவார்கள்; காலை வாரி விட்டு ஓடும் சந்தர்ப்பவாதிகள் முளைப்பார்கள். சறுக்கு மரங்கள், முறுக்கான மனத்தினர், இப்படிப் பலப்பல வரும். இடையிடையே அரசின் அட்டகாசம் நடக்கும். இதற்கெல்லாம் ஈடு கொடுத்து சுதந்திர உணர்ச்சி கனன்று எழவேண்டும்! அப்படி எரியும்படிப் பாதுகாப்பது பெரிய பணியாகும்!!

ஆத்திரத்தால் அடக்குமுறைகளை அவிழ்த்துவிடும் அரசுக்கு அதே ஆத்திரத்தை திருப்பி விடுவதென்பது கடினமல்ல. படத்திலே காணப்படும் தலைவர் வெகு எளிதிலே அதைச் செய்துவிட முடியும்!" தென் ஆபிரிகாவிலேயே

சக்திமிக்க ஜூலு இனத்தைச் சேர்ந்தவர் இவர், ஜூலு என்னாலே நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு நரம்பை ஒரு விரலால் தட்டிவிட்டால் அந்தப் பகுதி முழுதுமே அசைவற்று நின்று போகும் முறையெல்லாம் கற்றறிந்தவர்கள் இவர்கள். மிக மிக முரட்டுத்தனமானவர்கள், எதுவும் அவர்களுக்கு இலட்சியமில்லை. உதைக்குஉதை! குத்துக்குக் குத்து தான்!! இப்படிப்பட்ட இனத்தின் தலைவரான இவரால் தன் கூட்டத்தை ஐரோப்பியர் மீது திருப்பிவிடவா முடியாது? ஆள்வோர் ஆங்கிலேயரே தவிர தென் ஆபிரிகாவின் பெரும்பாலான மக்கள் ஆதிக்குடிகள் தான்! சுற்றியுள்ள நாடுகளில் வாழும் அத்தனை நீக்ரோக்களும் ஒன்று சேர்ந்து காறித் துப்பினால் அந்த எச்சலிலேயே தென் ஆபிரிகா சர்க்கார் அமிழ்ந்துவிடும் இருந்தும், இந்தப் பெரியவர், அந்த முறைகளில் ஈடுபடவில்லை

ஏன்?—முடியாது என்பதாலல்ல! கூடாது பலாத்காரம் என்பதால்!! அன்புநெறி மூலம் எதையும் சாதிக்கலாம் என்கிற அசையாத உறுதியின் காரணமாக. அவர் மட்டும் 'தலை' யைக் கொஞ்சம் ஆட்டியிருந்தால் இரத்தக் களரி ஏற்பட்டிருக்கும், தென் ஆபிரிகாவில். தன் இன மக்களுக்கு எவ்வளவோ கொடுமைகளைத் தென் ஆபிரிக சர்க்கார் செய்கிறதென்று புரிந்தும், ஆத்திரத்துக்கு இரையாகாமல் அன்பு வழியிலேயே போராடி வருகிறார்.

இந்த ஒரே காரணத்துக்காகவே ஆல்பர்ட் லூதுலி என்கிற பெயர் கொண்ட இப்பெரியாருக்கு, 1960 ஆம் ஆண்டுக்கான சமாதான நோபிள் பரிசு, அண்மையில் வழங்கப்பட்டிருக்கிறது! அமைதியான வழியில் தன் நியாயத்துக்காகப் போராடி வருகிற ஒரே காரணத்துக்காக உலகத்தின் மிகப்பெரியப் பரிசான இது அளிக்கப்பட்டிருக்கிறது!!

பரிசு அளிக்கப்பட்ட இந்த நேரத்திலும்கூட தன் ஊருக்கு 40 மைல் தொலைவிலுள்ள ஓரிடத்தில் இவர் பாதுகாப்புக் கைதியாகத்தான் இருக்கிறார்—பரிசை வாங்க ஸ்வீடனுக்குப் போகக்கூட தென் ஆபிரிகா அரசு அனுமதிக்காது போலிருக்கிறது—இந்த கிழமை நடந்த ஒரு பாராட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூட நிறவெறி சர்க்கார், இவரை விடவில்லை.

இதனால் அவருடைய சுதந்திர உணர்ச்சி, குன்றிவிட்டதா! உலகம்தான் மதிக்காமல் விட்டதா!! ஆபிரிகா அரசு வேண்டுமானால் அமைச்சர் சுப்பிரமணியத்தைப் போல, 'என்ன வெற்றி பெற்றுவிட்டாய்? எனக் கேட்கலாம். சம்பத் கட்சியின் 'சண்டியர்களைப்' போலப் பாயலாம். ஆனால், அமைதிக்கும் அன்புக்கும் தகுந்த பரிசு கிடைக்காமலா போகும்!!

* * *

லூதுலியே ஆச்சரியப்பட்டாராம்—எங்கோ ஒரு மூலையில் கிடக்கும் எனக்கு இந்தப் பரிசா என்று! அதேபோல, ஒரு நாளைக்கு, அன்பையும் அறவழியையும் பாதுகாக்கும் காரணத்துக்காகவே நமது அண்ணாவுக்கும் உலகத்தின்பாராட்டுக்கிடைக்காமலா போகும்? விடுதலை இயக்கங்கள் அடிதடிக்கு ஆளானாலும், ஆரம்பத்தில் பூண்டற்றுப்போய்விட்டது போலக் கருதப்படினும், ஏளனம் சாபம் முதலியவைகளுக்கு ஆளானாலும்—ஏன்? தோல்விகளையே தொடர்ந்து பெற்றாலும்கூட—கடைசியில் வெற்றி பெற்றதில்லையா?

இந்த நூற்றாண்டில், சனநாயக முறையில் எதையும் பெறமுடியும்—அன்பு மார்க்கமே அதற்கான சிறந்த மார்க்கம்—என்றெண்ணுகிற அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகமாகும்! அது நினைத்தால் இந்த நாட்டில், எந்த இரத்தக் களரியையும் உண்டு பண்ண முடியும்! ஆனால், அண்ணா வழி அதுவல்ல: அப்படிச் செய்வதுதான் 'வெற்றி' என்று அமைச்சர் கருதுவாரானால், கழகக் காளையர், அதையும் செய்வர்—அன்பர் பண்டித நேரு சொன்ன 'உள்நாட்டுப் போரே' ஆயினும் அஞ்சிடார்—ஆனால், அது யாவும் அண்ணாவின் காலத்துக்குப் பிறகு நடந்தாலும் நடக்கலாமே ஒழிய, வள்ளுவரையும் புத்தரையும் பின்பற்றிச் செல்லும் எமது தலைவர் காலத்தில், போவழி ஏற்படாது! அமைதி வழியில்தான் தி. மு. க செல்லும்!! அவ்வழி, நிச்சயம், வெல்லும்.

அடித்த மொட்டை போதாதா?

எத்தனையோ மக்கள்இனம்; மொழிகள்; பண்பு!
எவ்வளவோ நாகரிகம்! வேறு பாடு!
இத்தனையும் ஏன்இந்த இந்தி யாவில்?
இந்தியர்தான் எல்லோரும்! சேர்ந்து ஒட்டு

மொத்தத்தில் ஒற்றுமையைக் காப்போம் என்றால்
மொத்தாமல் விடமாட்டான் தெற்கு நாட்டான்?
எத்தனைநாள் எத்துவது நம்மை? இந்த
ஏமாற்றுப் பேச்செல்லாம் இனிஎ தற்கு?

பண்டிதரோ படித்தவரோ உலகம் சுற்றிப்
பார்த்தவரோ எவரானால் நமக்கு என்ன?
கண்டபடிப் பேசுகின்றார் என்று சொன்னால்
கண்டிப்போம்! அதுநமது கடமை! சோற்றுத்

தண்டங்கள் தலையாட்டும்! 'ஆமாம் சாமித்'
தரித்திரங்கள் கைத்தாளம் போடும்! நாங்கள்
மண்டுகளா? மடையர்களா அவர்க ளைப்போல்?
மானமுள்ளோர்! அறிவாற்றல் படைத்த கூட்டம்!

சர்க்கரைச்சொல் கொட்டுகின்ற நேரு 'இந்துச்
சமுதாய ஒற்றுமையைக் காப்போம்!! என்று
கொக்கரித்தார்; கொந்தளித்தார்; துள்ளித் தாண்டிக்
குதித்துள்ளார் மதுரையிலே! இவர்க்கு ரொம்ப

அக்கரைதான்! இருக்காதா பின்னே? நம்மை
அடக்கிவைத்து அதிகாரம் செய்வ தற்குப்
பக்கபலம் தேடுகின்றார்! ஐயா! நேரு
பண்டிதரே! தெரியாதா உங்கள் சேதி?

எவன்ஒப்புக் கொண்டான்உம் இந்தி யாவை?
எவனுக்குத் தேவைஇந்தக் கதம்பப் போக்கு?
அவமான அரசாட்சி—தெற்கை வாட்டும்
அநியாய அரசாட்சி உங்கள் ஆட்சி!

குவளைமலர்க் கண்ணிரண்டால் தவலைக் கண்ணீர்
கொட்டுகின்றார் நித்தநித்தம் எங்கள் மக்கள்!
கவனத்தில் வையுங்கள்! உங்க ளால்தான்
காலமெல்லாம் தேய்கின்றோம்! தேம்பு கின்றோம்!

அடித்தமொட்டை போதாதா? மூளை தன்னை
அடுத்தபடி உறிஞ்சுதற்கா இந்தத் திட்டம்?
தடித்தனத்தை ஒடுக்குங்கள்! உங்கள் பேச்சுத்
தந்திரத்தை அடக்குங்கள்! தெற்கு நாட்டார்

குடித்தனத்தைக் கெடுத்தவரை போதும்! மேலும்
குடிகெடுக்கும் கலப்படத்தைச் செய்ய எண்ணும்
மடத்தனத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டோம்!
மாரடிக் கும்பலுடன் இணைய மாட்டோம்!

-கவிஞர் பொன்னிவளவன்

* * *

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு 85. ந. பை

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,
(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

நான் கண்ட அண்ணா

-12-

கழகம் பிறந்து வளரத் தொடங்கிய காலத்தில், நாடகத் துறையின் மூலம் பேருதவிகளைப் பெற்ருேர், நாம். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் நவது கூட்டம் ஒன்றுக்குத் தடை விதிக்கப்பட்டு; மீறவே, துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது! அந்த வழக்கில் சிக்கிய நமது தோழர்களுக்கு உதவி செய்வதென்கிறமுறையில், நிதிதிரட்ட விரும்பினுர், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளரான தோழர் சி..வி எம். அண்ணுமலை காஞ்சியில், எனக்கு உற்ற நண்பராகவும், என் குடும்ப நலனில் நாட்டம் கொண்டவராகவும் விளங்கியவர் அண்ணுமலை. கழக சம்பந்தமாக அவர் என்னசொன்னுலும் நான் கேட்பேன். நிதி திரட்டுவதற்காகச் சகோதரர் கருணுநிதி எழுதி தடைக்கு ஆளானதால் 'பலநாமதேயங்கள்' பூண்டு ஆங்காங்கும் நடைபெற்ற, தூக்கு மேடையை-வேதனைக்குரல், என்கிற பெயரில் வாலாஜாபாத்தில் போட்டோம்! காஞ்சித் தோழர்களையும், கே. ஆர். அர். நாடக மன்றத்தினரான எம். என் கிருஷ்ணன், பி. எம். மணி, ஜி. எஸ். மகாலிங்கம், முத்துக்கூத்தன். இராசையா, ஆறுமுகம் முதலியவர்களையும் கொண்டு, அந்த நாடகத்தை நான் ஏற்பாடு செய்தேன். சகோதரர் கருணுநிதியும் புலவர் குழந்தையாவும் பங்கேற்ருர்கள். அதில் தானும் நடிக்கக் கண்ணதாசன் விரும்பினுர். அப்போதெல்லாம் கருணுநிதி என்ன செய்தாலும் அதில் கண்ணதாசனுமிருப்பார்! அடடா அந்தச் சகோதரத்துவமும் பாசமும் எப்படித்தான் இவ்வளவு வெறுப்பாக மாறியதோ? மலர், முள்ளாவதில்லை! ஆனுல் மனித இருதயங்கள் எவ்வளவு சீக்கிரம் பசுக் குணத்திலிருந்து புலிக் குணம் பெற்று விடுன்றன!! நாடகம் பற்றி 'திராவிடநாடு' பத்திரிகையில் விளம்பரம் எழுதிப் போட்டேன். அப்பொழுது கண்ணதாசன் என்பதற்கு முன்னுல் கவிஞரைச் சேர்த்தேன்... ஒட்டியிருக்கும்போது சிலரை உயிரைவிட மதித்து விடுகிருேம். வெட்டிக் கொள்ளும்போது, உயிரைப் போல மதித்தவர்கள் தும்மினுல் கூட துடுக்குத்தனம் என்கிருேம். இது தவறு! மிக மிகத் தவறு!! யாரை:யும் சரியாக எடைபோட்டு, தராசைப் போல பழகவேண்டும். ஆனுல், ஆரம்பகால ஆர்வத்தில், மனிதமனம் காட்டாறு போல இருக்கிறது. அன்பும் நட்பும் கொள்ள எந்தச் சமவெளியானுலும் ஓடிப்போய்ப் பாய்கிறது. களங்கமோ குதர்க்கமோ இருதயத்தில் படியாத பருவத்தில் ஓடியாடிப் பழகுகிருேம். ஆனுல் சங்கமக் கட்டம் நெருங்க நெருங்க, கரைகட்டப்பட்ட ஆறுபோல்ஓடும் பருவம் வரவர, மனிதன் ஆகா, எவ்வளவோ. தேர்ந்து'விடுகிருன் நமது கழகத்தில் கூட ஆரம்பகால நிலைமைக்கும் இன்றைக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. யாரைக் கண்டாலும்' அவர்கள் புதிதாகக் கழகத்தில் சேர்ந்தார்களென்ருல், அவர்களை உயர்த்தி உயர்த்தி மேலான நிலையில் கொண்டுபோய் வைத்துவிடுவது கொள்கையில் அவர்களுக்குள்ள பிடிப்பென்ன, எவ்வளவு காலமாக அவர்கழகத்துக்காகப் பாடுபட்டவர், எப்படியெப்படி கஷ்ட நஷ்டங்களையேற்றவர் என்கிற "ஜாதகத்தை"ப் பார்ப்பதில்லை. இந்த ஆர்வம், ஏழைகளைக் கொண்ட ஒருஇயக்கத்தில் ஏற்படவே செய்யும்! அதிலும் சுயமரியாதை இயக்கம், எவராவது நம்முடன் சேருவார்களா என்று ஏங்கி ஏங்கி வளர்ந்ததாகும். அதனுலோ, என்னவோ, அவரைத் தெரியுமா, இவரைத் தெரியுமா என்று பேசுவதில் நமது தோழர்கள் ஆனந்தம் பெறுவர்! அவர் எமது கழகத்தில், இவர் எமது பேச்சாளர் என்று சொல்லிக்கொண்டு பெருமைப்படுவர்!! சரியாக எடைபோடு முன்பே மாதம் முப்பது நாட்களிலும் எனக்குக் கூட்டங்கள் உண்டு என்று சொல்லக்கூடிய தலைவராக்கிவிடுவர்! தஞ்சைத் தோழர் எ. கே. வேலன் விஷயத்தில், இதே முறைதான், நம்மவர்களால் கடைபிடிக்கப்பட்டது. ஆர்வத்தோடுதான் அவரும் வந்தார். ஆனுல் 'பளபளப்பு, பயன்தரும் என்றுஎண்ணியதும், கழகத்தை விட்டு, பளபளப்பூருக்கேப் போய்விட்டார்! கிட்டத் தட்ட கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கழகத்தில் சேர்ந்த கொஞ்சநாளைக்குள் பெற்ற பெருமைகளையும், பெற்ற பளபளப்புகளையும், இன்னும் கொஞ்சம் நாள் கழித்துப் பெற்றிருந்தால் ஒரு வேளை நல்ல அரசியல் வாதியாகப் பயன்பட்டிருக்கக் கூடுமோ, என்னவோ!!...

சமீபத்தில் ஒரு தோழர் என்னிடம் வந்தார். நல்ல கதர்கட்டியிருந்தார்," என்னங்க!" என்றேன. "நான் ஒரு நல்ல எழுத்தாளனுகி கருணுநிதி மாறன் போல் நிறைய சினிமாக்களுக்குக் கதைவசனம் எழுத ஆசைப் படுகிறேன்" என்கிருர். "ஆமாம்! அதற்கு ஏன் என்னிடம் வந்தீர்கள்?" என்றேன். "என்னை' எம். ஜி. ஆர். எஸ். எஸ், ஆர். முதலியவர்களிடம் அழைத்துப் போய் அறிமுகம் செய்து வைக்க வேண்டும்', என்ருர். ",எதற்காக!" என்றேன். "என்னங்க இப்படிக் கேட்கிறீங்க. நான் நேற்று தி. மு. க. மெம்பராகி விட்டேன்க. மெம்பரானுல் இதையெல்லாம் உங்களைப் போன்றவங்க செய்வாங்கன்னு சொன்னுங்க. நீங்க, இப்படிக்கேள்விக் கேட்கிறீங்களே?" என்ருர், அத்தோழர் கோபத்துடன்... இப்படியொரு ஆசை பலருக்கு இருக்கிறது! தி. மு. கவில் சேர்ந்தாலே போதும் உடனே கருணுநிதி மாறனுகி விடலாம், எம். ஜி. ஆரைப் பிடித்து இரண்டு சான்சு வாங்கி விடலாம், என்றெல்லாம் எண்ணுகிருர்கள் சிலர். சினிமாத்துறையென்பதும் ஒரு தொழில் திறமைக்குத்தான் எந்தத் தொழிலிலும் இடமுண்டு. கட்சிக் காரர்கள் என்பதற்காகவோ, கர்ச்சனை செய்தால் கைதட்டுகிருர்கள் மக்கள் என்பதற்காகவே யாரையும் சினிமா உலகம் ஏற்றுக்கொண்டு விடாது. ஆனுல். அப்படியெண் அதே எண்ணத்தில் சேர்ந்து, அப்படியெதுவும் நடக்காதபோது, "என்ன எம். ஜி. ஆர். ? என்ன எஸ். எஸ். ஆர்?" என்று கோபமடைந்து விடுகிருர்கள். இப்படிப் பட்டவர்களால் கழகத்துக்கு ஒருதுளியும் இலாபமில்லை!! ஒருவேளை, இரண்டொரு



அரங்கண்ணல்

வாய்ப்புகள், எப்படியாவது கிடைத்து பளபளப்பூருக்குள் சென்றதும்; அவர்களும் எவரெஸ்ட்டை எட்டிப் பிடித்த நிலையில். கட்சியாவது, புடலங்காயாவது என்று போய்விடும் சூழ்நிலை வந்து விடுகிறது!!

புதியவர்கள் என்பதாலேயே அவர்கள் திறமைசாலிகளாயிருந்தாலும் மட்டுப்படுத்த வேண்டும் எனபதல்ல, என் கருத்து. அவர்கள் தத்தமதுதிறமைகளை உயர்த்திக் கொள்ள கழகத்தை ஒரு சாதனமாகக் கருதக் கூடாது அந்தத் திறமைகளால் கழகத்துக்குப் பலத்தையும் நல்ல பெயரையும் கொண்டுவந்து கொடுக்கும் உண்மையாளர்களாய் விளங்க வேண்டும். அப்படிப் பட்டவர்களா, என்றுஎடைபோட கொஞ்சநாட்கள் தரவேண்டும். அதைவிட்டு' சீக்கிரம் புகழ்ந்து விட்டு, அவ்வளவு சீக்கிரம் அவர்களைக் கண்டு அதிருப்தியும் அடைவதால் என்ன பலன்? அவர்கள்நம்மைத் திட்டுவர்! நாம் அவர்களைத்திட்டுவோம்!! இரண்டையும் பார்க்கும் பொதுமக்கள்,

(11ம் பக்கம் பார்க்க)

உதய சூரியன்

புஞ்சை, புஞ்சை ஆச்சென்ருர்,
புதுப்புது பாசனம் பார் என்ருர்,
விளையுது நெல்லு மலைபோல என
விளம்பரம் பலமாய்ச் செய்திட்டார்,
விளைச்சல் அதிகம் ஆனபின்பு
விலைகள் விஷம்போல் ஏறுவதேன்?
வீட்டைத் தேடிக் காங்கிரசார்
ஓட்டுக் கேட்க வரும்போது
விளக்கம் கேட்பீர், தோழர்களே!
திருவிடம் விடுதலை பெற்றிடவே
தி. மு. கழகம் ஆதரிப்பீர்!
'உதய சூரியன்' உம் சின்னம்
உலகு தழைத்திடச் செய்வதும்
'உதயசூரியன்' உணர்ந்திடுவீர்!

எட்டுத் தொகையும்
பத்துப் பாட்டும் **ஏட்டினில்**

இந்தி குட்டக் குனியும்
குணக்கேடர்கள் **நாட்டினில்**

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 3-11-61 கதிர்- 36

தாகம் தணியாது!

"கூட்டுப்பட்டு வாழோம்!"

"நாங்கள் என்ன அடிமைகளா?"

"பதவிகளை வீசியெறியத் தயார்!"

"பதினைந்து பேரில் ஆறுபேர் விலகி விட்டோம்!!"

"எங்களுக்கு ஒரு தனி மாநிலம் தேவை."

"டில்லி எங்களை வஞ்சிக்கிறது!!"

* * *

பண்டிதநேரு அவர்கள் ஆனந்தமாகக் கூட்டினார் தேசிய ஒருமைப் பாட்டு மாநாடு. எல்லோரும் இந்தியரே என்கிற உணர்ச்சியை எப்படி ஊட்டுவது என்கிற யோசனைகள் கொட்டப்பட்டன. அதற்கென்று ஒரு நிரந்தர கமிட்டியும் இந்த கிழமை அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால்! ஆனால்!!

அதே சமயம் தலைப்பிலே தந்த முழக்கங்கள் வானை முட்டு கின்றன. டில்லி வேறு; நாங்கள் வேறு என்று பேசப்பட்டிருக் கிறது. தனி மாகாணம் அமைத்துக் கொடுக்கிறாயா இல்லையா என்று அதட்டிக் கேட்கப்பட்டிருக்கிறது. அசாம் எல்லையில்தொல்லைப் பிரதேசம் என்று கருதும் நாகநாட்டில்தான் இவ்வளவு கிளர்ச்சியும்!!

நாக மக்களுக்கு தனிநாடு வேண்டும் என்பது பிசோ என்பவருடைய கோரிக்கை. அதற்காக அவரைப் பிடித்துத் தண்டிக்க முயன்றது டில்லி. நண்பராயிருந்த ஷேக் அப்துல்லாவே படாத பாடு படும்போது தப்பித் தவறி நாம் சிக்கிவிட்டால் என்னவாகுமோ என்று பயந்த பிசோ இரகசிய மாக இலண்டனுக்குத் தப்பிச் சென்று வாழ்கிறார்!



அவர் அங்கேயிருந்தாலும், அவரு டைய தோழர்கள் விடாமல் 'தனிநாடு, வேண்டும்' என்கிற கோரிக்கைக்காகப் பாடுபட்டு வருகின்றனர் நாகரீக முதிர்ச்சி பெறுதவர்கள்,நாகர்கள். அதனால் அங்கே அறப்போருக்குப் பதில் நிசப்போரே நடக்கி றது. தாக்குதல்-கொள்ளை—ஆளைத்தூக்கிப் போடுதல் முதலிய முறைகள் கடைப்பிடிக் கப்படுகின்றன பிசோவின் ஆதரவாளர்க ளால் இதை தடுக்க இராணுவத்தையே கொண்டுபோய் வைத்திருக்கிறது டில்லி!!

சுதந்திர உணர்ச்சியைத் துப்பாக்கியும் பீரங்கியுமா தடுத்து நிறுத்தி விட முடியும்? நாங்கள் தனி! எங்களுக்கு தனிநாடு தேவை! அந்த நாட்டுக்கு நாங்களே அதிபதிகள்! அசாமோடு சேர்த்து வைப்பதால் எங்கள் நலன்கள் பாதிக்கப்படுகின்றன! அசாம் டில்லிக்கு அடிபணிந்தி ருக்கலாம்—எமது நிலை அதுவல்ல!!—என்கிற கிளர்ச்சிக்குரல் எழுந்த வண்ணமேயிருந்து வருகிறது; டில்லியா எமக்கு எசமானர்கள்?—என்று நாகநாட்டுக் கிளர்ச்சிக்காரர்கள் கேட்கிறார்கள்.

ஒருமைப்பாட்டை அவர்களுக்குணர்த்த பன்முறை நேரு அவர்கள் சென்றார்! நாகர் உடையை யணிந்துகொண்டு அவர்களைச் சேர்ந்தவர்தான் நானும் என்று காட்டிக்கொள்ள முயற்சித்தார்! நயத்தால் வேண்டினார்! பயத்தால் மிரட்டினார்!!

நாகர் கிளர்ச்சி அடங்கவில்லை.

பிசோவும் பிடிபடவில்லை.

இதுபோன்ற சமயங்களில் ஏகாதிபத்தியவாதிகள், எடுபிடிகளைப் பிடிப்பதுதானே வழக்கம். அப்படி யாராவது கிடைப்பார்களா என்று தேடிய டில்லிக்கு நாக நாட்டிலும் சிலர் கிடைத்தார்கள்!! அவர்களுக்கு உபசரிப்பு, பேட்டி, கைலாகு, கௌரவம், அன்பழைப்பு, விருந்து என்று விடேன் தொடேனென்று டில்லி செய்தது. அவர்களுக்கு டில்லியின் மரியாதை இனித்தது! அதே சமயம் விடுதலை விரும்பிகள், மக்கள் முன் தங்களை 'துரோகிகள்' என்று குற்றம் சாட்டுவதும் புரிந்தது!!

அதனால் நேருவைப் பார்த்து வேண்டினர், நீங்கள் என்ன சொன் னாலும் சரி, எமது நாகமக்கள், அவர்களுக் கென்று ஒருநாடு இருக் கிறது என்று சொன்னாலொழிய திருப்தியடைய மாட்டார்கள்" என்பதாக.

வேண்டியவர்களே சொல்லும்போது என்ன செய்வதென்று எண் ணிய டில்லி, "அப்படியா? அப்ப சரி! நாகர் மாகாணம் என்று பெயர் வைத்துக் கொள்ளலாமே..." என்றது.

இல்லை யில்லை! அது கூடாது. நாக நாடு என்பதுபோல விளங் குவதுபோல வேண்டும்" என்றனர் அவர்கள்.

வேறு வழியில்லாத டில்லி 'நாகா லேண்ட்' அதாவது நாகநாடு என்கிற பெயரை அளித்தது!!

நாகர்கள் கேட்ட பெயரை அளித்த அதே டில்லி, 'தமிழ் நாடு' என்கிற பெயரைத் தர மறுத்தது! 'நாடு' என்றால் ஏதோ பிரிந்திருப் பதுபோன்ற பிரமை ஏற்டும் என்று நமக்குக் காரணமும் அளிக்கப் பட்டது.



ஆலோசனைச்சபை

நம்மைப்போல அறவழியல்லவே நாகர்கள் வழி! அடிக்கு அடி யாயிற்றே!! அதனால் நாகநாடு அளிக்கப்பட்டது. அதற்கென்று ஆலோசனைச் சபை—அதில் பதினைந்து பிரதிநிதிகள்—அவர்களைக் கட்டுப்படுத்தும் 'கவர்னர்' போல ஒரு அதிகாரி—அந்த அதிகாரி அசாம் கவர்னருக்குக் கீழே இருப்பார்—அசாம் கவர்னர் டில்லியைக் கேட்டே எதையும் செய்வார்—என்கிற 'வெள்ளைக்காரன் அரசியல் தந்திர முறை' யில் ஒரு அமைப்பும் அளிக்கப்பட்டது.

அந்த அமைப்பினர், பதவி உறுதி மொழி தருவதைப் படம் காட் டும்! சிலுஅவோ என்பார், அந்த ஆலோசனைச் சபையின் தலைவரா வார்!!

சபை இருந்தது—உறுப்பினர்கள் இருந்தார்கள்—ஆனால், அவர் களுக்கென்று எவ்வித அதிகாரமும் இல்லை—ஏதாவது ஒரு மனுப் போட்டால்கூட அது அதிகாரிகளால் சிபார்சு செய்யப்பட்டு, கவர்ன ரால் அங்கீகரிக்கப்பட்டு, டில்லியால் அனுமதிக்கப்பட்டு, அதன் பிறகே உத்திரவு பிறப்பிக்கப்படும்!!

இதைக்கண்டு ஆலோசனை சபைக் குமுறியது—என்னய்யா, திருக் கூத்து? இதற்கேன் நமக்கு மெம்பர் என்கிற பட்டம்? எங்கோ யிருக்கிற டில்லிக்கு நாம் எடுபிடிகளா—என்பது போன்ற, தலைப் பிலே தரப்பட்ட முழக்கங்கள், எழுந்தன.

வீறுகொண்டெழுந்த பல உறுப்பினர்கள் படபடவென்று தமது ராஜினமாக்களை எழுதியனுப்பினர்!

பார்த்தது டில்லி! பரவசமூட்டினோம், பாராட்டினோம், கைகுலுக் கினோம், ஆனால் இவர்களும் முழுவிடுதலை கேட்கும் கிளர்ச்சிக்காரர் களைப் போலாகிவிடுவார்கள்—போலிருக்கிறதே என்று அஞ்சியது!!

டில்லியில் தேசீய ஒருமைப்பாடு நடந்து கொண்டிருந்த நேரத் தில்தான், நாகர் மலைக்குன்றில், இந்த ரகளைகள் நடந்தன.

டில்லி, அழைப்பு விடுத்தது, தன்னுடைய அன்பர்களுக்கு-

இந்தக் கிழமை நாகர் பிரதிநிதி களெனப்படுவோர், நேருவைச் சந்தித்துப் பேசினர்.

"பதினைந்தோடு இன்னொன்றாய் பதினாறுவது மாநில மாக நாகர், பூமியை ஆக்கினோம்"

"தனியானதொரு சர்க்காரையும், சட்ட சபையையும் உண்டு பண்ணித் தருகிறோம்."

"உங்கள் மாநிலத்தை நீங்களே ஆள விரைவில் வழி செய்கிறோம்"

என்று நாகர்களுக்கு நேரு அவர்களால் உறுதி மொழிகள் வழங் கப்பட்டுள்ளன! இதோடு போனால் போதும், தனி நாடு கேட்காமல் இருந்தால் சரி, என்கிற ஆசையால்- முதலில் இதைகூட மறுத்த டில்லி, இப்போது ஒப்பியிருக்கிறது!!

சிலுஅவோ, நாகநாடு சென்று, வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லி நாகர்கள் மனதை மயக்க நினைக்கலாம். ஆனால், கிளர்ச்சி செய்யும் நாகர்கள் நிச்சயம் கேட்கமாட்டார்கள். அவர்கள் விரும்பு வது, தனி நாடு, தனியரசு. எவருக்கும் கட்டுப்பட்டு வாழாத ஓரரசு.

இந்த உரிமைக் குரலுக்கு 'மூடிபோட' என்னென்னவோ செய் கிறது டில்லி! இருந்தாலும் சுயமதிப்பு என்பது ஆசைப் பேச்சுக்குள்

(7-ம் பக்கம் பார்க்க)

கனமழை கொட்டும்!

இடி விழும்

பிணம் குவியும்!

உலகமே ஒழியும்

"அம்மா! தங்கள் மகனுன நான் பி. ஏ. பட்டம் பெற்று விட்டேன்..."

"மகனே! என் செல்வமே! நீ நன்ருயிரு..."

"தாயே! இந்த ஆண்டு நான் எம். ஏ.வில் முதல் வகுப்பில் பாஸ்..."

"அப்படியா? யாருக்கடாவரும் உன் புத்திசாலித் தனம்?"

"அம்மா! அம்மா! நம்ம சர்க்கார் என்னைப் பெரிய விஞ்ஞானி யென்று சொல்லிப் பட்டமும் பதவியும் கொடுத்திருக்கிறது..."

"எனக்கென்னடா மாணிக்கமே, இந்த உலகத்தில் வேண்டும்? என் மகன் நாடே போற்றும் விஞ்ஞானியென்று சொல்லிக்கொள்ளும் பெருமை எந்த தாய்க்கடா வாய்க்கும்."

பற்பல ஆராய்ச்சிகள் செய்தான் மகன்! வெற்றிகள் கண்டான்! விருதுகளும் சன்மானங்களும் பெற்ருன்! அப்படிப்பட்ட மகன் ஒருநாள், அகமகிழ்ச்சியோடு தாயிடம் ஓடி வருகிருன். உலகமே கண்டு வியக்கக்கூடிய மாபெரும் சாதனையைச் செய்த ஆனந்தம் அவனுக்கு! அம்மா, அம்மா என்று இன்பப் பூரிப்புடன் ஓடிவர்தான்! எப்போதும் எதிர்கொண்டழைக்கும் தாய், இல்லை, எதிரே முக்காடிட்டுக் கொண்டு மூலையில் கிடந்தாள்.

"அம்மா!!" என்று அருகே ஓடினுன், காலடியில் வீழ்ந்தான்.

மகனை நோக்கினுள் தாய். இரு கையாலும் தூக்கி நிறுத்தினுள். எந்தக் கரங்களால் அவள் வாரியணைப்பாளோ அதே கரங்களில் கட்டாரியுடன் நின்ருள்.

"என்னம்மா!" என்ருன்.

"என் மகன் பேரும் புகழும் பெற்ருன், ஆராய்ச்சியில் தேர்ந்தான் என்றபோது அளவிலா மகிழ்ச்சியடைந்தவள் நான். உன் ஆராய்ச்சி மக்களை வாழ்விக்கும் என்று எண்ணினேன். இன்று தான் கேள்விப்பட்டேன், புதியதொரு போர்முறைக் குண்டு கண்டுபிடித்துக்கொடுத்தாயாமே அரசாங்கத்துக்கு. அதை வீசியெறிந்ததால் ஆயிரக்கணக்கானேர் செத்தார்களாமே. ஏண்டா! இப்படிப் பல்லுயிரை யம் சாவுலகுக்கு அனுப்பவா, நீ விஞ்ஞானியானுய்? இப்படிப்பட்ட விஞ்ஞானியும் தேவையில்லை, இத்தகைய மகனும் எனக்கு தேவையில்லை; உயிரோடுஇருந்து பல உயிர்களை நீ கொல்வதைப் பார்க்கிலும், இப்போதே நீ ஒழிவது நல்லது" என்று ஓங்கிக் குத்திக் கொன்ருள்.

* * *

நடிகை தோழியர் ஜி. வரலட்சுமி என்பார், அந்த வீரத் தாயாக நடிப்பாராம்! சில ஆண்டுகளுக்கு முன்பு உலக சமாதானத்தின் அவசியம் குறித்து வலியுறுத்தும் நோக்குடன் ஆந்திரப் பகுதிகளின் பல இடங்களிலும் இந்நாடகம் சிறப்பாக நடந்ததாம்!

நாடகத்தில் வந்த தாயின் நிலையிலேயே உலகிலுள்ள நல்லறிவாளர்கள் இன்றைய தினம் இருக்கின்றனர்.

விஞ்ஞானிகளின்சாதனைகளைக் கண்டு மகிழ்ந்த உலகம் இன்று அஞ்சுகிறது.

ஐயகோ அடுக்கடுக்காய்குண்டுகளா!!

நிலாவுக்குப் போகலாம்!— என்று சொன்னபோது அறிவி முதிர்ச்சி கண்டு, ஆனந்தக் கூத்தாடியது உலகம்.

வான வளையத்தை மனிதன் வட்டமிட முடியும் என்று செய்து காட்டியபோது வியந்தோம், அனைவரும்.

ஆனல் அறிவின் முதிர்ச்சி அதோடு நிற்கவில்லை! உலகத்தையே அழித்துவிடக் கூடிய 'குண்டு'களைச் செய்து வெடித்துக் காட்டுகிறது இன்று!!

அன்ருேர் நாள். ஜப்பானிலுள்ள ஹிரோஷிமாமீது அணுக் குண்டைப் போட்டான். அந்நகரமே நாசமாகியது! அணுவாயு கலந்த இடங்களில் வ ழ்வோரின் மூக்கு ஓட்டையாயிற்று—வாய் கோணலாகியது—கை ஒரு பக்கம் திரும்பிக் கொண்டு விட்டது —என்பன போன்ற கொடுமைகளைக் கேட்டோம்! படங்களில் பார்த்தபோது பதறி துடித்தோம்! கருக்குள் இருக்கும் குழந்தைகள் கூடப் பாதிக்கப் பட்டனவாம்! கடலுக்குள்ளிருந்த மீன்களைப் பிடித்து தின்ருேர்கூட நோய்வாய்ப்பட்டனராம்!!

ஒரு அணுக்குண்டு கண்டே, உலகம் நடு நடுங்கியது—அந்த அணுக்குண்டைப்போல ஐம்பது மடங்கு சக்தியுள்ள குண்டு, எம்மிடம் இப்போது தயார் என்றறிவித்தது அமெரிக்கா! அது சொல்லிமுடிப்பதற்குள், உனக்கு நான் என்ன மட்டமா—என்னிடம் ஆயிரத்தைந்நூறு மடங்கு சக்தியுள்ள குண்டு (மெகடான்) உண்டு. இதோ அதுவெடிப்பதை பார் என்று வெடித்தும் காட்டியிருக்கிறதுரஷியா!!

ஆகாயத்தில் வெடிக்கப்பட்டு அங்கே அணுக்குண்டின் கதிர்கள் பரப்பிவிடப்பட்டிருக்கின்றன, அவை வெகு தூரத்தில் விடப்பட்டிருந்தால், கவலையில்லை. தாழ்வாக விடப்பட்டிருப்பின். தரணிக்குப் பல இன் ல்கள் விளையும் என்பதாகக் கூறுகிருர்கள். ரஷியா, இந்தியா, சீனு, ஆபிரிகா நீங்கலாக மற்றப் பகுதிகளில் அந்தக் கதிர்களால் ஆபத்துவரும் என்று அஞ்சப்படுகிறது! திடீரென கனமழை கொட்டுமாம்—வெயில் பாலைவனத்திலடிப்பதுபோல எரிக்குமாம்—அந்தக் காற்றை உட்கொண்டோர் குடல் வெடிக்குமாம்—முகம் கோணுமாம்— அப்பப்ப, கொடுமைகள் பெரிது என்று கூறுகின்றனர்!!

அந்தக் குண்டால் மனித உலகம் எவ்வளவு சித்திரவதைகளை அனுபவிக்கும் என்கிற பயங்கரமான வர்ணனைகள் வருகிறஅதே நேரத்தில், "ஆகா! எமக்கு மட்டும் ஆற்றலில்லையோ? ரஷியா 1500மெகடான்குண்டை வெடிக்க விட்டால், அதைவிடச் சக்தியுள்ள 'நியூட்ரான்' குண்டு எம்மிடம் தயார்!" என்று சவால் விடுகிறது அமெரிக்கா!!

இந்த நியூட்ரான் குண்டை வெடிக்க விட்டால் (இந்தக் குண்டுக்கு "எம்"பாம்ப் என்கிற பெயராம்) அழிவில்லாமலே ஆளை கொல்லுமாம், அதற்குள்ளிருக்கும் சக்திவாய்ந்த கதிர்கள் காற்றில் பரவுமாம். அப்படிப் பரவிய காற்றை உட்கொள்ளுவோர், இருந்த இடத்தில் யாரிடமும் எதுவும் பேசாமல் பிணமாகி விடுவாராம். மாளிகைகள் தரைமட்டமாகா! ஆனல் அதற்குள்ளிருக்கும் மனிதர்கள் பிணமாகி விடுவர்! படையெடுத்துவரும் துருப்புகள், தூக்கிய துப்பாக்கிகளுடன் பிணமாவர்! குமாஸ்தா மேசையின்மீது பிணமாகக் கிடப்பார்! அந்த வட்டார முழுதிலும் வீடுகளிருக்கும்—ஆட்களிருக்க மாட்டார்கள்! பல்லாண்டுகள் வரை

8-ம் பக்கம் பார்க்க)

6—ம் பக்கத்தொடர்ச்சி

அடங்குவது அல்லவே!!

இப்போது 'இவைகளை'ப் பெற்றுச் செல்லும் இவர்கள், நாளாக ஆக, பீசோவைப்போலத் தனி நாடு கேட்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி? கடந்த ஆறு மாதத்துக்கு முன் டில்லி சொன்னதற்குத் தலையாட்டியவர்கள் தானே இப்போது ராஜினுமாக்களை வீசியெறிந்தனர்!!

* * *

ஒருமைப்பாடு — ஐக்கியம்—இந்தியரே யாவரும் — என்கிற உணர்ச்சி, இருதயத்திலிருந்து உருவாக வேண்டியதே ஒழிய, ஏற்படுத்தக்கூடிய ஒன்றல்ல.

கமிட்டிகள், எடுபிடிகள், கலா மன்றங்கள், எத்தனை யமைத்தாலென்ன! இருதய உணர்வு எற்பட்டாவிடும்!!

பட்டம் பதவிகளைப் பிடித்துச் சிலபேரை தயாரித்துவிட்டோம்— குரல் ஓய்ந்துவிடும் என்று எண்ணலாம். இந்த 'இன்பம்' எத்தனை நாளைக்கு!!

நாகர் கிளர்ச்சி, இதையே காட்டுகிறது—கிளர்ச்சியிலீடுபட்டவர்கள் பீசோக்களின் சகாக்களல்ல; நேருவின் அன்பர்கள்! ஆம், ஒருமைப்பாடு விரும்பும் பண்டித நேரு அவர்களுடைய அன்பர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!!

—0— —0—

உங்களது

தேவைக்கு

V. G. பன்னீர்தாஸ் & கோ.

சைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் எதிரில்

போன்: 88084 சென்னை-15

பிராஞ்சு:

மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்

27, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17



சுலபமானது

தவணைகளில் வாங்குவது

[சென்னை வாசிகளுக்கு மட்டும்]

மர்பி, நேஷனல்-எக்கோ, ஜி. இ. ஸி. ரேடியோக்கள் மற்றும்

சைக்கிள், கைக்கடிகாரம், வால் கிளாக், மின்சார விசிறி, தையல் மிஷின் முதலியன

• எளிதில் வாங்க விசேஷ சலுகைகள்

• விரும்பும் மாடல்களில் உத்திரவாதத்துடன் கிடைக்கும்

murphy radio

Delights the home!

தேயும் தெற்கு

தேம்புதல் அறியீரோ !

கடலூர் கனல்

"வடநாடு நரகலோகமல்ல..."

"ஆமாம். மந்தமதி படைத்தவனைத் தவிர, இதயம் என்றொன்றில்லாதவனைத் தவிர மற்றவரனைவரும் அபிப்பிராய பேதமின்றி ஒப்புக் கொள்ளும் உண்மை இது. யார் இதனை இப்பொழுது மறுத்தார்கள்."

"யாரும் மறுக்கவில்லையென்றால் ஏன் பிறகு 'வடநாட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்கக்கூடாது—வெட்டிக்கொண்டு வந்துவிட வேண்டும்' என்று மூச்சு விடாமல் முழங்குகிறீர்கள்."

"நாங்கள் வெட்டிக் கொண்டு வந்துவிட வேண்டும்என்பதற்குக் காட்டும் காரணமே வடநாடு சொர்க்க புரியாக இருக்கிறது என்பதுதானே..."

"என்ன?!!"

"என்ன சம்பத் (புரியாதது போல) நடிக்கிறீர்கள்? இந்திய துணைக் கண்டத்தின் வடபகுதி வளர்ந்துக் கொண்டும், தென் பகுதி தாழ்ந்துக் கொண்டும் செல்வது, பிரிந்து போக வேண்டும் என்ற தத்துவத்திற்கு பெரிதும் துணை புரிவதாக இருக்கிறதே தவிர, ஒரு சிறிதும் அந்தக் கருத்து சரியில்லை என்பதை மெய்ப்பிப்பதாக இல்லை" என்ற கருத்தில் 'இந்து' ஆங்கில தின இதழின் புதுடில்லி நிருபர், கடந்த 30—3—60ந் தேதியன்று எழுதிய கட்டுரையினை நீங்கள் தானே எங்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் படித்துக்காட்டி பரவச மூட்டினீர்கள்.

"ஒரே கட்சியினரின்; ஒரே ஆளுகையின் கீழ் கடந்த பதினான்கு ஆண்டு காலமாக அசைக்க முடியாதிருக்கும் இந்திய துணைக்கண்டத்தின் மேல்பகுதி மட்டும் சொர்க்க புரியாகவும், கீழ்பகுதி கேட்பாரற்று கேவலமாகவும் இருக்கிறதே என்ன காரணம்? அவர்கள் வேறு, நாம் வேறு என்ற மாற்றாந்தாய் மனப்போக்கை தவிர வேறு ஏதாவது இதற்கு காரணம் சொல்ல முடியுமா?" என்று கேட்ட எங்களுடன் நீங்களும்தானே ஒரு குரல்—உரத்த குரல் கொடுத்தீர்கள்.

தென்னாடு ஏமாற்றமுற்ற ஒரு மனநிலையில் இருக்கிறது. அதன் தரம் உயர்ந்து விட்டது—விடுதலை கிடைத்துவிட்டது—என்ற உணர்ச்சி தென்னாட்டில் எதுவுமே இல்லை. நாட்டின் வடகோடியில் அமைந்திருக்கும் இந்த தலைநகருக்கு வந்திருக்கும் நாங்கள் இங்கே அந்நியர்கள் போலவே எங்களை எண்ணுகிறோம்—நடத்தப்படுகிறோம். எங்களுக்கு 'எல்லாம் நமக்குச் சொந்தம்; நாடு முழுவதும் நம்முடையதே; நாம் எல்லோரும் ஒரே நாட்டவரே' என்ற எண்ணம் உணர்ச்சி கிஞ்சித்தும் ஏற்படவில்லை' என்று பாராளுமன்றத்திலேயே—நண்பர் தர்மலிங்கம் கூட அல்ல — நீங்கள்தானே முழங்கினீர்கள், ஆனால் இன்று."

"ஆமாம்...அன்று உண்மை அறியாமல் ஏதோ கூறிவிட்டேன் அப்படியே சொல்லியிருந்தாலும், அந்தக் காலம் வேறு, இன்று காலம் மாறிவிட்டது. கருத்து வளர்ச்சியடைந்து விட்டது. எவ்வளவோ மாறுதல் ஏற்பட்டு விட்டது."

"என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது? வடக்கு, தெற்கு என்ற யேதம் நீங்கிவிட்டதா? சிந்திரி, சித்தரஞ்சன். டி. டி. டி, மருந்து உற்பத்திசாலை, பெனிசிலீ தொழிற்சாலை, உருக்கு ஆலை போன்ற கனரக தொழிற்சாலைகள் இங்கு ஏற்படுத்துவதற்கு ஏதாவது முடிவெடுத்திருக்கிறார்களா? அல்லது எங்பொழுதாவது ஒரு காலத்தில் ஏற்படும், என்பதற்காகவாவது, அறிகுறி தென்படுகிறதா?

தூங்கிக்கொண்டு இருக்கும் தூத்துக்குடி மங்களூர் துறைமுகங்களுக்கு ஏதாவது நல்வழி ஏற்பட்டு விட்டதா?

அணு மின்சார நிலையம் இங்கு அமைக்க ஒப்புதல் கொடுத்து விட்டார்களா?

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சர்வே நடத்திய (தென் பகுதியில) எந்த ஒரு இருப்புப் பாதை திட்டமாவது எடுத்துக் கொள்ளப்பட்டதா?

அல்லது மூன்றாவது 5 ஆண்டு திட்டத்திலாவது—பல மைல் நீளத்திற்காவது— தென்னாட்டில் ஒரு புதிய ரயில்பாதை அமைக்க திட்டமிருக்கிறதா?

'தென்னகத்திற்கு போக்குவரத்து வசதி வேண்டும்' என்றால் 'தென்னகத்திற்கு புதிய பெருந்தொழிலில் அபிவிருத்திதிட்டங்கள் எதுவும் இல்லை; எனவே பாதை இல்லை என்கிறார்கள், 'தென்னாட்டிற்கு கனரக தொழிற்சாலைகள் வேண்டும்' என்றால், போக்குவரத்து வசதிகள் இல்லை' என்கிறார்கள். இப்படி அப்பாவியான வாடிக்கைக்காரரை மோசடி செய்ய சந்தைக்கடையில் கையாளப்படும் அற்பத்தனமான தந்திரத்தை கையாளுகின்ற அரசாங்கத்தின் தன்மையில் புதிதாக ஏதாவது மாறுதல் ஏற்பட்டுள்ளதா?

இதனையெல்லாம் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறி, காடியாக கத்தியதற்கு ஏதாவது நியாயம் கிடைத்ததா?

இப்பொழுது என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது இந்திய அரசாங்கத்துடன் நாம் ஒட்டிக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கூறுவதற்கு.

தூர்ந்துவிட்ட கண்டாலா துறைமுகத்திற்கு வேண்டுமென்றே மறுபடியும் நம்நாட்டு வரிப்பணம் கொட்டி இறைக்கப்படுகிறதே அது எதைக் காட்டுகிறது?

இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் புதிய ரயில்பாதைகள் அமைக்கவும். இரயில் பாதைகளை மின்சார மயமாக்கவும் செலவிடப்பட்டிருக்கும் 156.16 கோடியில், தென் பிராந்திய இரயில்வேக்கு செலவிட்டுள்ள ரூ. 92 இலட்சத்தைக கணக்குப் பார்த்தால் மொத்தச் செலவில் 1 சத விகிதத்தில் முக்கால் பாகம்கூட கிடைக்கவில்லையென்றால் அது எதைக் காட்டுகிறது.

சிந்தியுங்கள்.

ஏற்கனவே மீட்டர் கேஜ் உள்ள உஜ்ஜெயினிக்கும் — இந்தூருக்கும், புதிதாக 4 கோடி செலவில் பிராட்கேஜ் போட முடிகிறது.

பூனா—போபால் இடையே இரயில்பாதை 12 கோடி செலவில் வேகமாக இரட்டிப்பாக்குவதற்கு முடிகிறது.

உதயபூருக்கும் — ஹிமாயத் நகருக்குமிடையே 131வது மைல் நீளத்திற்கு புதியபாதை அமைக்க திட்டம் தீட்டுவதற்கு முடிகிறது. ஆனால்.

இருந்து, யுத்தத்தின்போது அகற்றப்பட்டுவிட்ட சேலம்—பெங்களூர் பாதையை திரும்பவும் அமைப்பதற்கானதிட்டத்தை நிச்சயம் எடுத்துக் கொள்ளுகிறேன் என்று லால்பகதூர்சாஸ்திரியார் சத்தியம் செய்துக் கொடுத்தும், இன்றும் அது நிறைவேற்றப்பட்ட பாடில்லை.

இப்படி வடவரின் காட்டுதனமான ஆவலைப் பூர்த்தி செய்வதற்காகப பொதுப்பணத்தை ஏராளமாக விரையம் செய்யும் அதே நேரத்தில தென்னகததிற்கு மட்டும் எதையும் செய்ய மறுக்கிறார்களே ஏன்?

'பாகிஸ்தான் அகதிகளுக்காகப் பாகாய் உருகும் பண்டிதர் நேரு மகனார் இலங்கை தீவிலிருந்து துரத்தப்படும் எண்ணற்ற தமிழர்களை தாமதமின்றி அந்தமான், நிகோபார் தீவுகளில் குடியேற்றி, வாழ்வு தரத்தக்க வகையில் திட்டம் தீட்டி, நிறைவேற்றி உதவ வேண்டும் என்ற நம்முடைய கோரிக்கைக்கு கூறிய பதில் என்ன?

சொல்லுங்கள் சம்பத்; என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது? என்ன வாழ்வு வந்துவிட்டது? காலம் மாறிவிட்டது உண்மை. நிலைமை மாறிவிட்டதா? ✽

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் யாரும் அப்பகுதிக்குள் போக முடியாதாம். போனால் பிணம்!!

கட்டுக் கதைகளில் படித்திருக்கிறோம், நச்சுப் பொய்கை, பாம்பு தீவு என்றெல்லாம்.

அதையெல்லாம் மிஞ்சக்கூடியதாக இருக்கிறது இன்றைய விஞ்ஞானிகள் செய்து தரும் கொடுமைக் குண்டுகள்.

கேட்கக் கேட்கப் பயமாயிருக்கிறது! மனிதன் தன் அறிவைக் கொண்டே அழிந்துபோய் விடுவானோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது!!

கொள்கை முரசொலிக்க...11—11—61 முதல்
புதுப்பொலிவோடு வருகிறது புரட்சி வார ஏடு

'கழகக் குரல்'

ஆசிரியர்: திருவை ஆ. அண்ணாமலை,

முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள்மட்டும் விண்ணப்பிக்க

'நிர்வாகி, 'கழகக் குரல், 5- பெர்தோ தெரு, சென்னை-14

தெலுங்கு கன்னட மொழித் தனி வடிவங்கள்:

தெலுங்கு கன்னடம் ஆகிய இரு மொழிகளிலுமே உ, ஊ, 7 முதல் 10 வரை உயிர்கள் (ரு, ர்ரு, லு, ல்லு) 17—18 உயிர்கள் (அம், அஹ) ஆகியவை சேரும்போது இயல்பான அகர உயிர் மெய் வடிவத்திலுள்ள சுட்டி அல்லது தலகட்டு அகல்வதில்லை. ஆனால் மற்ற உயிர்கள், அதாவது ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய 9 உயிர்கள் சேரும்போது அகர உயிர் மெய் வடிவத்தின் வலக்கோடியில் மேலிணைந்துள்ள தலகட்டு அகன்று, அதன் இடத்திலேயே உயிர்க் குறிகள் இணைக்கப்படும்.

(மெய் வடிவம் அல்லது தலகட்டு நீங்கிட மெய் வடிவத்தின் கோடி மேல்நோக்கியதாயிருக்கும்போது, இகர ஈகாரக் குறிகளின் இகரப் பகுதி ஒரு சுழியாய் ,அமையும்.

விளக்கம்: தெலுங்கு...



கன்னடம்:



மலையாளத் தனி வடிவங்கள்

மலையாளத்தில் உ, ஊ சேரும்போது பட்டியலின் படி ககரத்தை ஒத்த வடிவுடைய மெய் (ர) ஒன்றே.

உ, ஊ சேரும்போது ஐந்து எழுத்துக்கள் வேறு தனி வடிவம் பெறுகின்றன.

மலையாளம்:



(தொடரும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அவர், வரப்போவது இருக்கட்டும். அவர் இப்போதெல்லாம் 'வரப் போக' இருப்பது எங்கு தெரியுமா? இங்கே! என்னிடம் தான்!!"

"செச்சே! காலக்கொலை, எனக்கு. இந்தக் கன்றாவியை யெல்லாம் கேட்கவே, என் காது கூசுகிறது..."

"வாயால் சொல்லும்போதே உங்கள் காது கூசுகிறதே! அவர்களுடைய சேட்டைகளை யெல்லாம் காணும்போது என் மனம் எப்படிக் கூசியிருக்கும் என்று எண்ணுகிறீர். யோக்கியர்கள்; உத்தமர்கள், என்று ஊரில் உலாவும் இன்னும் பல பேரைப் பற்றிச் சொன்னால் உமக்கு மயக்கமே வந்துவிடும். ஆனால் நான் அவர்கள் ஊருக்கு உபதேசிப்பதையும் கேட்கிறேன், என்னிடம் வந்து அந்த உபதேசங்களைக் காற்றில் பறக்கவிடுவதையும் காண்கிறேன். பகிரங்கமாக அயோக்கியத் தனத்தில் ஈடுபடுவதை உலகம் கேவலம் என்று எண்ணுகிறது. ஆனால், இரகசியமாகப் பொல்லாத வேலைகளில் ஈடுபடுவதைச் சாமர்த்தியம் என பாராட்டுகிறது. உண்மையில் இரவில் ரோந்து வரும் நீர், சுவர் ஏறிக் குதிக்கும் கள்ளனைத்தான் கண்டிருப்பீர். கண் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஊரைக் கொள்ளையடிப்பவர்களை உமக்குத் தெரியுமா?"

"என் 'டூட்டியில்' யாரும் பகல் கொள்ளை யடிக்க முடியாது!"

"பைத்தியமய்யா நீர்! இரவு நேரம். என் வீட்டில் சப்தம் கேட்டதால், நுழைந்தீர். போலீஸ்காரரான உம்மைக் கண்டதும், என்னுடன் ஆடிப் பாடிப் பொழுது போக்க வந்த சுருள்கத்தி சுப்பன் ஆடு திருடி அமாவாசை, கத்திரிக்கோல் கனகு, முதலியோர் ஓடிவிட்டனர். விபசாரத் தடைச்சட்டத்தின்படி என்னைக் கைதுசெய்வதற்காக ஊர் பெயரைக் கேட்டீர். உம்மைப் பார்த்தால், எனக்கே, மரியாதை வருகிறது! போலீஸ்காரர்களிலே இவ்வளவு அனுதாபத்தோடு, என்னைக் கேள்வி கேட்டவர்கள் கிடையாது. ஐந்து பத்தை நீட்டுவேன். அவர்கள் போய்விடுவார்கள். பணத்தை நான் நீட்டியபோது 'அதைக் கசக்கி எறிந்தீரே அப்போதே நான் கண்டுகொண்டேன், நீர் தொழிலுக்குப் புதிசு என்று. இதோ, பாரும்! நான் சொல்வதை வைத்துப் பகற் கொள்ளையடிப்பவர்களைக் கைது செய்யப்போய் விடாதீர். நெருங்கினால் உமது வேலை போய்விடும்..."

"நியாயத்துக்காகப் பாடுபடுகிறவர்களை நெருப்பும் தீண்டாது!"

"நெருப்பு தீண்டாது! ஆனால் அந்த நெருப்பைவிடக் கொடுமையானவர்கள் உண்டய்யா, உலகத்தில். ஒரு உதாரணம் சொல்கிறேன். தங்கமடீ நீ!— என்று என் அங்கம் ஒவ்வொன்

(10-ம் பக்கம்

எதிரொலி

மதுரையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் காலஞ்சென்ற காங்கிரஸ் காரர்களான யு. கிருஷ்ணராவ், சர்தார் வேதரத்தனம் போன்றவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க வில்லையே! —விகடனின்வருத்தம்-

0 'போனால் போகட்டும் போடா' என்றிருந்து விட்டார்களோ என்னவோ?

* * *

அணுஆயுத சோதனைகளை நிறுத்தி வைக்க ஐ. நா- சபையில் இந்தியா கோரிக்கை —பேரிகை.

0 இந்தியாவின் நீண்டநாளைய இந்தக் கோரிக்கை நிறுத்தி வைக்கப் பட்டாலும் படுமே யொழிய அணு ஆயுத சோதனைகள் நிறுத்தி வைக்கப்படுவது என்னவோ சந்தேகந்தான் என்கிறார். ,பாரதப் பிரியர்ஒருவர்'

* * *

தமிழ்நாட்டில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுவது உறுதி!

—செய்தி-

0 இரும்பு எவ்வளவு உறுதியாக இருக்கிறதோ. அவ்வளவு உறுதியாக இருக்கும் இந்தத் திட்டமும். வாயளவில்! அப்படித் தானே?

* * *

செயற்கை முறையில் குழந்தை தயாரிப்பதில் ரஷ்யவிஞ்ஞானிகள் வெற்றி! —நவமணி

0 ஐயய்யோ' இனி நம்ப வேலைக்குச் சீட்டுகிழிந்துவிடுமே என்று பிரமன், பயப்படுவதாக ஒரு பக்தர் பகர்கிறார்!

* * *

காங்கிரஸ் கட்சியை ராஜாஜி கோபமாகத் தாக்குவது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை!

—நேரு

0 அது எப்படித் தெரியும், அவருடைய கட்சியைத் தூற்றிப் பேசி அவரையே 'முட்டாள்' என்று கடுங்கோபமாகத் தாக்கும் போது!;

* * *

தென்னாட்டில் நான் தேர்தலுக்கு நிற்க மாட்டேன்! —நேரு.

0 ஏன் பயப்படுகிறீர்? உமதுதென்னாடுதானேஇது நானும் தமிழன் தான்; தமிழ்நாடு எனக்கும் சொந்தம் என்று ஒரு மாதத்திற்கு முன்புதானே கூறினீர். அப்படியிருக்க இங்கு நிற்பதில் ஏன் பயப்படுகிறீர் என்று கேட்கிறார் அவரின் அன்றைய பேச்சைக்கேட்ட ஒரு காங்கிரஸ் காரர்?

அன்புவாணன்.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

றையும் வர்ணிப்பார், இரவில். அதே ஆட்களைப் பகலில் நான் தேடிப்போகிறேன் என்று வைத்துக்கொள். யார் நீ!? உன்னை, எனக்குத் தெரியாதே என்று அஞ்சாமற் சொல்லுவார்கள். தேடிவருவர் இரவில்! நான் நாடிப் போனால் விரட்டுவர்!! அப்படிப்பட்டவர்களைப் பழிவாங்க, என் அழகைத் தவிர, என்னிடம் வேறு ஆயுதம் கிடையாது. என்னைப் பார்த்துப் பார்த்து அவர்கள் பெருமூச்சு விடும்போது பேரானந்தமடைகிறேன். என் வீடு தேடிவந்து பர்சை திறக்கும்போது, பலபேரை வாட்டிய பணம் எனக்கு வருகிறது என்று இறுமாப்பு அடைகிறேன். என்னிடம் பல்லைக் காட்டி அவர்கள் இளிக்கும்போது, வெற்றி கண்டவள் போல் குதூகலிக்கிறேன். என்னைப் பழி வாங்கியது இந்த உலகம்! இந்த உலகத்தைப் பழி வாங்க, எனக்கு வேறு வழி தெரியவில்லை!! என் மானத்தை இழந்துகொண்டு உலகத்தை அவமானப்படச் செய்கிறேன்!''

"ஆமாம்! உனக்கு இருதயம் என்று ஒன்று கிடையாதா?''

"இருக்கிறது! ஆனால், அதில் யாரும் இதுவரை நுழைய முயற்சித்தது கிடையாது. என்னை நாடி வருகிறவர்களுக்கு என் உடலைத்தான் கொடுத்திருக்கிறேனே ஒழிய, என் இருதயத்தை இதுவரையில் யாருக்கும் நான் கொடுத்தது இல்லை. அவர்களும் கேட்டது இல்லை.''

"...அப்படியென்றால், உன் ஆன்மாவுக்கேத் துரோகம் செய்துகொண்டு, இந்தத் தொழிலைச் செய்கிறாய். இது எவ்வளவு கொடுமை தெரியுமா? சரியில்லை யென்று தெரிந்தும் ஒரு தவறை செய்வதைவிடக் கொடுமையானதில்லை யென்று மகாத்மாகாந்தி கூடச் சொல்லியிருக்கிறார்...''

"ஆமாம்! விபசாரிகள், பெரிய தியாகிகள். யாராலும் தங்கள் இருதயத்தைக்கூட ஏமாற்றி வாழ முடியாது. ஆனால் பசிக்காக அவர்கள் அந்தப் பாதகத்தைச் செய்கிறார்கள்-என்று, இப்போது காந்தியடிகள் இருந்தால், நானே எடுத்துச் சொல்லி, 'பெரிய தியாகி' என்கிற பட்டத்தைப் பெற்றிருப்பேன்''

"கடைசியாகக் கேட்கிறேன்—உன் மீதுள்ள அனுதாபத்தால் வேண்டிக் கேட்கிறேன்—இந்த நீச்சத் தொழில் உனக்கு வேண்டாம்.''

"சரி! விட்டுவிடுகிறேன். நாளை சாப்பாட்டிற்கு வழி...''

"வழி செய்தால்! விடத் தயாரா?''

"நீங்கள் வழிசெய்யலாம், சாப்பாட்டிற்கு. நானும் இத்தொழிலை விடலாம். ஆனால், இத்தனை நாளும் இத்தொழிலின் காரணமாக என்னைப் புசித்து ருசி கண்டவர்கள் விடமாட்டார்களே. அதனின்றும் தப்புவதென்றால், நான் யாராவது ஒருவருக்கு மனைவியாகிவிட வேண்டும். அந்தப் பெருமையை ஒரு விபசாரிக்கு அளிக்க எந்த மகாத்மா முன் வருவார்.''

"நானே முன்வருகிறேன்—நீ மறுபடியும் இந்தப் பாபத் தொழிலுக்குப்போவதில்லையென்றால்...''

"என்ன! நீங்களா?''

"ஆமாம்! உன்மீது நான் மிக மிக அனுதாபப்படுகிறேன்...''

"ஊர் சிரிக்கும், உங்கள் முடிவைக் கேட்டால்!''

"ஊரைப் பார்த்துச் சிரிக்குமளவுக்கு நான் உத்தமர்களின் நூலைப் படித்திருக்கிறேன்...''

"உற்றார், ஏளனம் செய்வார்கள்!''

"உற்றார், சுற்றம் எல்லாம் எனக்கு என் தாய்தான். நான் எது செய்தாலும் நேர்மையுடன் செய்வேன் என்பதில் தளராத நம்பிக்கை யுள்ளவளே, அத்தெய்வம்.''

"கோயில்களில் குடிகொண்டிருக்கும் தெய்வம் பேசாது! என் போன்றவர்களுக்கு அன்பும் காட்டாது!! ஆனால், நடமாடும் தெய்வங்களைச் சந்திக்க நான் இலாயக்கற்றவள். அன்பாலேயே என்னைப் புனிதப்படுத்தி விடும் அத்தெய்வங்களின் சந்நிதியை நான் அசுத்தப்படுத்தமாட்டேன்.'

"...இவ்வளவு நல்லவளான உன்னை என் மனைவியாக்கிக் கொள்ளாமல் நானும் இங்கிருந்து போகமாட்டேன்.''.

"என் ஆண்டவனே!''

"எழுந்திரு...''

"என் பெயர் தங்கம்...''

"வா, தங்கம் என்னுடன்!''

- 2 -

"யாரது? தங்கம்!''

"தங்கமல்ல, இப்போது கொலைகாரி!''

"சுருள்கத்தி சுப்பனைக் கொன்றது, நீயா?''

"ஆமாம்! கொன்ற கட்டாரி இதோ...''

"என்ன தங்கம் இது...?''

"எனக்காகப் பரிதாபப்படாதீர்கள். பரிதாபம் என்ற சொல்லுக்கே, பிறகு பொருளில்லாமல் போய்விடும்.''

"ஆமாம்! அம்மாவிடம் உன்னை விட்டுவிட்டு, கடைத் தெருவில் போய்பூ மாலை தாலியெல்லாம் நான் வாங்கி வருவதற்குள், எங்கே ஓடிவிட்டாய்?''

"நீங்கள் சொன்னதை விடப் பெரிய தெய்மாகக் கண்டேன், உங்கள் தாயை! என் கதையைக் கேட்டாவது, என்னை வெறுத்து அனுப்பிவிடுவார்கள் என, சொன்னேன். அத்தெய்வத்தின் கருணை இன்னும் பன்மடங்காகியது. அப்போதும் தங்கள் முடிவே சரியென்று ஆமோதித்தது; அத்தெய்வம் அந்தக் கருணைகை என்னால் தாங்க முடியவில்லை. என்னால் யோக்கியமான அயோக்கியர்களைப் பழி வாங்க முடியும். யோக்கியமே உருவாயமைந்த உங்கள் தாயின் ஜோதிக்குமுன் நான் புழு! இந்தப் புழு விழுந்து இறப்பதால், அந்த ஜோதிகூட களங்கப்பட்டுவிடும். அதனால், நீங்கள் வருவதற்குள் சமயம் பார்த்துத் தப்பினேன்...''

"என் மாமன் மகள் மங்களம் உன்னருகில் இல்லையா? உன்னைப் பார்த்துக் கொள்ளும்படி அவளிடம் சொல்லி வந்தேனே!''

"ஆமாம்! உங்கள் தாயைவிடப் பெரிய தெய்வமாகத் தெரிந்தாள், அவள், என் கண்களுக்கு. என்னக்கா, அத்தானின் குணம் கண்டுதானே, அவரைக் காதலித்தாய்—அவரை, யாருமே காதலிப்பார்கள்—என்றாள் அவள். அப்படிச் சொல்லும்போதே, தங்களுடைய மன விருப்பத்துக்காகத் தன்னுடைய காதலைக்கூடத் தியாகம் செய்கிறாள் அத்தேவி என்பதை புரிந்து கொண்டேன் நான். புழுவிலும் கேவலமான சிறு பூச்சியானேன், அத்திரு மங்கையிடம்!''

"மங்களம் என்னைக் காதலிக்கிறாளா...?''

"பாருங்கள்! உங்களருகிலேயே இருந்தும், உங்களால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதுபோல அவள் நடக்கிறாள். கண்களிருப்பது ஆடவரைக் கவர என்பது என் சித்தாந்தம்! ஆண்களுக்கு முன்பு கீழே குனியத்தான் கண்கள் என்பது அவள் சித்தாந்தம்!! அவள் மலை,நான் மடு. அவளைப்போன்ற உத்தமிகள்—தன் மனதில் வரித்தவர், ஒரு காரியத்தை ஆசையோடு செய்கிறாரென்றால், அந்த ஆசைக்காகத் தன்னையே பலி கொடுக்கக்கூடிய பெண்மணிகள் வாழும் நாட்டில் நான் உயிரோடு இருக்கவும் அருகதையற்றவள்! அதனாலேயே, அவளும் நீங்களும் ஆனந்தமாக வாழ்வதே சரி என்று உங்கள் வீட்டை விட்டு ஓடிவந்தேன்?''

"ஓடிவந்தவள், ஏன் தங்கம் கொலைகாரியானாய்?''

"ஊழ்வினை என்பார்கள்—சொர்க்கம் நரகம் என்பார்கள்—ஒருவன் செய்த நன்மைக்கான சொர்க்கமும், தீமைக்கான நரகமும் பூமியிலேயே இருக்கிறது என்பது என் கருத்து. எங்காவது ஓடிப்போய் வாழலாம் என்றெண்ணி வந்தவளை என் 'பழைய வினை' சந்தித்தது' சுப்பன் உருவில். பலாத்காரம் செய்யலானான் மறுத்தேன். குத்த வந்தான். நான் குத்திவிட்டுக் கொலைகாரியாகிவிட்டேன்...''

"என்ன காரியம் செய்துவிட்டாய், தங்கம்!''

"இப்படிப்பட்ட கொலைகாரிக்கும் அனுதாபப்பட்டு, இன்னும் பெரிய தியாகியாகி விடாதீர்கள். பிறகு என்னால் அந்தக் கடனைக் கழிக்கவே முடியாது. உங்களைத் திருமணம் செய்யாமல் ஓடி வந்ததின் மூலம், நாமும் ஒரு தியாகம் செய்தோம் என்கிற மனச்சாந்திப் பெற்றேன் அந்த மனச்சாந்தியைவிடப் பெரிதாக முடியாது, நான் தங்களுக்கு மனைவியாகிப் பெறும் ஆனந்தம்...என்னை மன்னித்து விடுங்கள்.''

"தங்கம்...!''

"தயவு செய்து என் கைகளிலே விலங்கைப் போடுங்கள்.''

"தங்கம்...''

"வேண்டாம், வேண்டாம். இந்தப் பாபியின் உடல், பலபேருடைய கரம் பட்டது. தங்களுடைய பரிசுத்தமான கரம் இதன் மீது படவேண்டாம். விலங்கை என்னிடமே கொடுங்கள்...''

"என்ன தங்கம் இது!''

'...உங்கள் கண்ணீரைத் தாங்குமளவுக்கு இன்னும் இந்தப் பூமி புனிதமாகவில்லை. தயவு செய்து கண்ணீர் விடாதீர்கள். மங்களத்தை மனைவியாகக் கொண்டு வாழுங்கள். நான் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும்...''

"தங்கம்! உனக்கு வாழ்வுதர விரும்பிய நான் கண்ட முடிவு இதுதானா, தங்கம்...?''

"என் வாழ்வு முடியவில்லை! இப்போதுதான் அரும்புகிறது. நேற்றுவரை நான் தனியாளாயிருந்தேன். இப்போது ஒரு உயிரையும் கொண்டு செல்கிறேன். யாருக்கும் நேற்று வரையில் என் இருதயத்தில் இடம் கொடுத்ததில்லை. உங்கள் ஒருவருக்கே தந்தேன். அந்த ஒருவரை இருதயத்தில் ஏந்தியபடியே செல்கிறேன். மற்றவர்களுடைய ஆசாபாசங்கள் அண்டாமல் சிறைக் கதவுகள் செய்துவிடும். என மனதில் புகுந்தவரோடு பிணமானேன் என்கிற பெருமையை தூக்கு மேடை அளித்துவிடும். நான் வருகிறேன்...!''

—oo—oo—

பிறப்பு

திருச்சி வட்டச் செயலாளர் திரு. சு. நெடுமாறன் தலைமையில் தமிழ்த் திருமணம் செய்து கொண்ட, மண்ணச்சநல்லூர் மாவட்ட மன்றப்பன்னேக்கு உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு விளந்தை அறிவழகன் வாழ்க்கைத் துணைவியார் திருமதி பூங்கோதை அம்மாள் அறிவுமணி தாய் சேய் நல விடுதியில் பெண் குழந்தையை ஈன்றெடுத்துள்ளார்கள். தாயும் சேயும் நலம்.

இதோ ஒரு சஞ்சீவி

கால் ஆணிக்கு

(மேல் பூச்சு மருந்து)

காலில் குழி விழுந்தும், சதை வளர்ந்து முற்றியும் நடக்க முடியாமல் வருந்துபவர்களுக்கு நிச்சயநிவாரணி

விலைதபால்செலவுடன் 4-25

வாணி புக் டிபோ,

3, மலையபெருமாள் தெரு, சென்னை-1.

வெற்றி யாருக்கு ?

- பாசுமணி -

உனக்காகவே நான் பிறந்தேன்
எனக்காகவே நீ பிறந்தாய்
இருவருக்காகவே இவ்வுலகம் பிறந்திருக்கிறது.
பெண்ணே! பார்வையில் உயிர் வாங்கிப் பலன் என்ன?
பேசாத கிளியை நான் பார்த்ததில்லை
மலர்கின்ற பூக்கள் கனி தருகின்றன.
கண்ணே! இதழ் திறந்து ஒரு வார்த்தை சொல்லேன்!
சிதம்பரம் சொல்லிக்கொண்டே இருந்தான்
சிங்காரி சிலையானுள்! முகம் சிவக்க விடைபெற்றுள்.

* * *

சிரிக்கச் சிரிக்கப் பேசுபவன் சேது
சிங்காரியை இவனும் கவர்ந்தான்

'எல்லாப் பெண்களும் ஏசுவைப் பின்பற்றுபவர். ஒரு கன்னத்தில் முத்தமிட்டால் மறு கன்னத்தைக் காட்டுவர்' என்றுன்.

சிங்காரி சிரித்தாள், சேது பூரித்தான்.

மாலையும் சோலையும் அவர்களை மகிழ்வித்தது.

சிதம்பரமும் சேதுவும் ஒருவர் விட்டு ஒருவர், அவளைச் சந்திப்பர்; வர்ணிப்பர், போய்விடுவர்!

இருவர் இதயமும் அவளுக்குப் புரிந்தது. இருவரில் எவரைத் தேர்ந்தெடுப்பது?

புதிர் கிளம்பியது—புயல் உருவானது நெஞ்சில்.
பூவோ தடுமாறி நின்றது ஏதும் புரியாது!

* * *

நீதான் சிதம்பரமா?
நீதான் சேதுவா?
உருக்கமாகப் பேசுவாயாமே
சிரிக்கச் சிரிக்கப் பேசுவாயாமே
சிங்காரியை உடனே மறந்துவிடு
அதையே நான் உனக்குச் சொல்கிறேன்.
எச்சரிக்கிறேன், விலகிவிடு
எரிமலையாவேன் எதிர்க்காதே!
எதிலும் எனக்குத் தோல்வி யில்லை
இதிலும் எனக்குத்தான வெற்றி.
காதல் 'க்யூ' வில் வந்த இருவருக்கும் போட்டி.
வார்த்தை முற்றி கைகலக்கும் நிலை வந்தது.
கணநேரம் இருவரும் யோசித்தனர்.
உயிரினும் இனியவள் ஒருவனுடன்தானே வாழ முடியும்!
இதற்கு ஏன் பகை—பலப்பரீட்சை
உலகெங்கும் சமாதானக் குரல் எழுகின்ற நேரம்
ஒருத்திக்காக இருவர் சாவதா?
ஒத்துப்போகும் மனப் பண்பு பெறுவோம்
கரும்பனைய முடிவெனக் கட்டித் தழுவினர்.
சீட்டெழுதிப் போட்டு முடிவெடுக்க முன்வந்தனர்.
சிறுமி ஒருத்தி எடுத்தாள். பிரித்துப் பார்த்தனர்.
சேதுவின் பெயர் அங்கே தென்பட்டது.
சிதம்பரம் அவனை வாழ்த்திஞன்.
சிங்காரியைத் தங்கையாகக் கொண்டான்.
இசை முழக்கம் எங்கிருந்தோ கேட்டது.
இதுவே நல்ல வேளை புறப்படு, சேது!

* * *

ஆடம்பரமான ஊர்வலம் அழகாக வந்துகொண்டிருந்தது

இதைப்போல விழா நடத்துவேன்
இன்பமாக நீங்கள் வாழ உயிர் தருவேன் என்று.
பூரித்துநடந்த சேது ஊர்வலத்து மணமகளைக் கண்டான்
'ஐயோ' என அலறி வீழ்ந்தான்.
இருவருமில்லை; எவனே ஒருவன்—
இருந்தான் அவளருகில்! மணமகனுக!!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இருவரையும், வியப்புக் கண்ணேடு பார்ப்பர்.

புதிதாகச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அவர்களை 'தனிசாதி' யாக்கிப் பழகவேண்டும் என்பதுமல்ல. பழையவர்களைவிட ஆர்வமும் யூகமும் கொண்டவர்களாய்ப் பலர் இருக்கக்கூடும்.

'எத்தனை ஆண்டுகளாய் நான் தி. மு. க!'' என்று சொல்லிக் கொள்வதோடு தன்பணி முடிந்தது எனக் கருதும் பழையவர்களும் இருக்கக்கூடும். அவர்களை விடப் புதியவர்கள் பல மடங்கு மேல். ஆனல், நான் கழகத்தில் சேர்ந்து அதன்மூலம் கலையுலகத்துக்குஉடனே போய்ச் சேரலாம் என்று கருதுகிறுர்களே! அவர்களை மட்டுமே, நான் சொல்கிறேன்!! இப்படி எவ்வித சலனமுமின்றி, வருகிறவர்களைப் பற்றி, நாம் எடைபோட வேண்டிய அவசியமில்லை, கழகக்கொள்கைக்காக வருகின்றவர்கள் எப்போதும்கழகத்துக் காகவேயிருப்பார்கள். ஆனல். கழகத்தைப்படிக்கட்டைப்போலக் கருதுகிறவர்கள் படிகளில் ஏறியதும்' தன் வேலையைப் பார்த்து கொண்டு போய் விடுவார்கள்! படிக்கட்டில் ஏற முடியாமல் மூக்குடைந்தால், உடனே, உறுமிக் கொண்டு போய் திட்டுவார்கள்!! அவர்களால் கொள்கைக்கு, இலாபமில்லை–

* * *

அண்ணு அவர்களின் 'ஜனநாயகப் பண்பு' பற்றி, இந்த முதல் பகுதியில், நான்ஓரளவுக்கு விளக்கியிருப்பதாகக் கருதுகிறேன். கழகத்தில் அவர் அரும்பச் செய்த அந்த உயரிய பண்பு இன்னும் எந்தெந்த சமயங்களில் எப்படியெப்படி பரிமளித்து வருகிறது என்று விளக்க வேண்டுமேயானல், கழகத்தின் ஒவ்வொரு சம்பவத்தையும் குறிப்பிட்டாக வேண்டும. அது, கழகவரலாறு எழுதுவோர் வேலையாயிருக்கட்டும்! அடுத்த இதழ்முதல், ''அண்ணுவின் பெருந்தன்மை'' என்கிற புதிய பகுதியைத் துவக்குகிறேன்.

(வளரும்

'பக்கத்திலிருக்கும் பிரயாணிகளின் உடமைகளைத் திருடியதற்காக ஆறு பேர்களை ரயில்வே போலீசார் பிடித்தார்கள். சிவன் கோயில் கட்டட நிதிசேர்ப்பதற்காகவே இப்படித் திருடிவருவதாக அந்தக் கைதிகள் சொன்னுர்கள். திருடித் திருடிப் பாதிக்கோயில் வரை கட்டிவிட்டதாகவும் மறுபாதியை முடிக்கத் தாங்கள் போனல்தான் முடியுமென்றும் மதச் சுதந்திரம் தந்துள்ள சர்க்கார் தங்களை விடுவிக்க வேண்டும் என்றும் அந்தத் திருடர்கள் கோர்ட்டில் வேண்டினுர்கள்!'

—சிம்லாடிரிப்யுன்

* * *

கேரள சர்க்காருடைய தாழ்த்தப்பட்டோர் நல இலாகா அறிவிப்பொன்றை வெளியிட்டிருக்கிறது. அதன்படி மலை வகுப்புப் பையனுக்கும் ஒரு பார்ப்பனப் பெண்ணுக்கும் கடந்த ஆண்டு மலபார் வட்டாரத்தில் கலப்புத் திருமணம் நடந்திருந்தால் அத்தம்பதிகளுக்கு ரூ 500 அன்பளிப்புத் தரப்படும்.

—இந்தியன் எக்ஸ்பிரஸ்

* * *

''இந்துஸ்தான் டைம்ஸில்'' இப்படியொரு விளம்பரம் வந்திருக்கிறது:

'பள்ளிக்கூடம் விற்பனைக்குத் தயார். நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது. மாத வருமானம் ரூபாய் 1500

மூசெளரியில் ஒரு நகரசபை சிப்பந்தி இறந்துபோனுர். அவருடைய பிணத்தை எரிக்க விறகு கிடைக்கவில்லை.

அவருடைய குடும்பத்தார் எவ்வளவோ முயன்றும், விறகு பஞ்சத்தின் காரணமாக, விறகு கிடைக்கவேயில்லை.

வேறு வழிலல்லாத காரணத்தால் பிணத்தை பெட்டியொன்றில் வைத்து அரித்துவாரத்துக்கு அனுப்பினுர்கள்.

—இந்தியன் எக்ஸ்பிரஸ்

ஃ ஃ ஃ

அலகாபாத்திலுள்ள சில விபசார விடுதிகளைப் போலீசார் நுழைந்து சோதித்தபொழுது; மிகமிகப் பிரசித்தி பெற்ற சாது ஒருவர், தன்னைக் கண்டு தெரிசிக்க வந்த பெண் பக்தைகளுக்கு எழுதிய காதல் கடிதங்கள் கிடைத்தன!!

—'டிரிபியூன்'

0 0 0

கேரளாவிலுள்ள கோட்டயத்துக்கு அருகிலிருந்த குக்கிராமம் ஒன்றிலிருந்து ஆச்சரியமான இந்தச் செய்தி வந்தது:

கிருஷ்ணன் நாயர் என்கிற அலுத்துப்போன கணவர் ஒருவர் தன் மனைவியான குட்டியம்மாவை, ஒரு வாலிபனுக்கு அளித்துவிட்டார்!!

25 வயதுள்ள அந்த வாலிபனுக்கும் 40 வயதுள்ள குட்டியம்மா என்கிற மாதுக்கும் நீண்ட நாட்களாக கள்ளத் தொடர்பு இருந்துவந்ததாம். பொறுத்துப் பொறுத்து அலுத்போன அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஊரிலிருப்பவர்களை யெல்லாம் ஒரு விசேடம என்று சொல்லிக்கூப்பிட்டு, அவர்கள் முன்னிலையில் இரண்டு பேரையும் ஒன்று சேர்த்து வாழ்த்தியனுப்பினுர்!!

—சண்டே ஸ்டாண்டர்ட்

கேள்வி பதில்

கே: சீர்திருத்தவாதி, தாய்நாட்டுக்கு எந்தெந்த வகையில் பணியாற்ற வேண்டும்?

எஸ். இராசாராமன்,
சென்னை முதல் வட்ட
தி. மு. க. உறுப்பினர்

ப: கொள்கையை மூடாமல், மாற்றுக் கொள்கை கொண்டவனை மதித்து, நண்பனாக்கி, அன்பின் மூலம் அவனை நம் கொள்கையை நாடும்படிசெய்து தியாகம் செய்ய வேண்டிய அழைப்பு வரும்போது, தாமதியாமல்!

* * *

கே: உறங்கும் நேரம் தவிர கவலையே உருவாகக் கொண்டவனுக்கு அக்கவலையைப் போக்கும் வழிதான் என்ன?

(அதே தோழர்)

ப: மனச்சோர்வே கவலைக்குக் காரணம். மாற்று மருந்து எதன் மீதாவது உற்சாகம் கொளல்; அதற்காக உழைத்தல்!

* * *

கே: சமூகத்தைத் தாக்குவதற்கென்று பத்திரிகை நடத்தும் சொக்கலிங்கத்தைப் பற்றி இரண்டு வார்த்தைகள்...

வி. கே. உதயசூரியன்,
பேராவூரணி

ப: செல்லாத காசு!!

* * *

கே: மார்தட்டிக் குரலெழுப்பும் திரு. கண்ணதாசன் அவர்கள் மறைமுகமாக ஆளுங்கட்சியினரை வாழ்த்துகிறாரே, அது மக்கள் குறையைப் போக்கவா? அல்லது செல்வம் சேர்க்கவா?

தி. து. ப. ஆனந்தன்
சென்னை-11

ப: இரண்டுக்குமில்லை! சப்தம் எழுப்ப!

* * *

கே: ....

தோழர் சீனுவாசன்,
பெங்களூர்-2.

ப: தங்களது கேள்வியைத் தயவு செய்து பெரியாருக்கு எழுதிக் கேட்கவும்.

* * *

கே: நீராவிமூலம்கப்பல் போக்குவரத்தை முதலில் ஆரம்பித்தது யார்?

பி. சு. பெரியதம்பி,
கன்யாகுமரி

ப: 'பிட்ச்' என்கிற அமெரிக்கர், இம்முறையைப் புகுத்தினார், ஆனால் முதல் நீராவிக்கப்பலைக் கட்டியவர் ரோபர்ட் பல்டன், என்பவர்.

கே: 'இந்தியா'—என்கிற பெயர் எப்படி ஏற்பட்டது?

கா. பொ. புனி,
வலிவலம்

ப: 'இந்து-தேஷ்' என்று சீனர்கள் அந்தக் காலத்தில் அழைத்தனர். அதற்குப் பிறகு பாரசீகர்கள் 'இந்து' என்று சொன்னார்கள். அதிலிருந்து இந்தியா வந்தது!!

* * *

கே: முதன் முதலாக எந்த நாட்டில் இரயில்வே ஏற்பட்டது?

சீதாபாய்,
தஞ்சை

ப: 18-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஜார்ஜ் ஸ்டீவன்சன் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கான அனுமதி கோரிவிண்ணப்பம் வந்தபோது பார்லிமெண்டில் பல விந்தையான காரணங்கள் சொல்லி மறுப்புகளும் எழுப்பப்பட்டன.

* * *

கே: உண்மை நிலையை விளக்கிய ராமமூர்த்தியிடம் தி. மு. கழகம் சீறிப்பாய்வானேன்?

ச. கோவிந்தசாமி,
ஆலூர்

ப: உங்கள் கண்ணுக்கு உண்மையாகப் பாடுவது எல்லோருக்குமே உண்மையாகப் பட்டுவிடாது.

* * *

கே: தமிழன் ஒரு காலத்தில் 'உலகை' ஆண்டான் எனச் சொல்வது அவன் ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்டிருந்தான் என்பதையல்லவா, சுட்டுகிறது?

(அதே தோழர்)

ப: 'உலகை' ஆண்டான் என்பது சரியல்ல. ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒவ்வொரு பண்பு,மனித குலத்தின் மாண்புக்குஎடுத்துக் காட்டாக விளங்கியிருக்கிறது. போர் செய்தல் — வாணிபம்—தன் கொள்கை பரப்பல், இப்படிப் பலப்பல. கால மாறுதல், அந்தப் பண்புகளை மாற்றியும் திருத்தியும் வந்திருக்கிறது. பிற நாடுகள் 'போரை'யே 'ஸ்கேலாக' வைத்திருந்த சமயத்தில், தமிழ் மன்னர்கள் கடாரமும் சிங்களமும் பிற தேயங்களும் வென்றனர் எனக் குறிப்பிடுவது அவர் தம் ஆற்றலையே தவிர ஆக்கிரமிப்பையல்ல! 'ஆக்கிரமிப்பு' எனும் சொல்லே, 18ம் நூற்றாண்டுக்குப் பிறகு உண்டானது

* * *

கே: திராவிட நாட்டுப் பிரிவினைக்கு வடவர் ஒப்புதல் தந்தாலும் பிரிவினை நிகழும்கால் பல பெரும்பிரச்னைகள்தோன்ற வழியேற்படுமே?

(அதே நண்பர்)

ப: இதே கேள்வியைத்தான் இந்திய துணைக் கண்டத்திலிருந்து சுதேச மன்னர்களையும் மைனாரிடி வகுப்பினரையும் சுட்டிக் காட்டி வெள்ளையர்எழுப்பினர்! பிரச்னைகள் எழலாம், ஆனால் அதைச் சமாளிப்பவர்கள் வெறியர்களானால் விபரீதம் எழும்; மதியூகிகளானால் எளிதில் முடியும்.

கலையகம்

ஒரு ஊமை! ஒரு செவிடு!!

எப்படியிருக்கும் வாழ்வு? பார்ப்பதைச் சொல்லவோ ஊமையால் முடியாது! 'ஆ—ஊ' என்று கத்தினாலோ செவிட்டின் காதில் விழாது!!

இந்த இலட்சணத்தில் இரண்டு பேரும் கணவனும் மனைவியும்.

ஒன்றினைபின்னொன்றாக இவர்கள் படும் அல்லல்கள், அப்பப்பா, அப்படியே மனதை உருக வைத்து விடுமாம். இச்சப்பதிகளுக்குப் பிறந்த ஒரு மூர்ஜைத, இவர்களுடைய பிறவிக் கேட்டால் வீணாகிறது.

சூதுவாதற்ற அந்த இருதயங்களுக்கு எப்படியிருக்கும் வாழ்வு?

'நாடே நகு மஜா—ஷிகு உதசுகுஷிகு' எனும் பெயர் கொண்ட ஜப்பானியதிரைப்படம் இது.

சென்னையில் வரும் 7ந்தேதி முதல் நடக்கவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவின் போது, ஏதாவதொரு தியேட்டரில் காட்டப்படுமாம்.

* * *

இன்பம் என்றால்என்ன?—என்கிற வினாவைக் கிளப்பி பிரான்சில் ஒரு படம் தயாரித்திருக்கிறார்கள்! ஒருவன் எப்போதுபார்த்தாலும் அதுஇது என்று சொல்லிக்கொண்டே ஆர்வத்தோடு வளர்ந்து பெரிய எழுத்தாளனாகி அந்த நாடே போற்றும் தியாகியாகி, அமைச்சன்கூட ஆகிறான், இன்னொருவன் ஆரவாரமின்றி ஆடம்பரமோ, புகழ் மாலைகளோ விரும்பாது தன்னுடைய ரொட்டிக் கிடங்கே கதியென்று வாழ்கிறான். அந்த நிலைமையிலும் ஒரு அநாதைக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரிக்கிறான். ஒருநாள் இருவரும் கூடி யார் வாழ்க்கையில் நிம்மதியும் இன்பமும் பெற்றவர்கள் என்று வாதிக்கிறார்கள். பதிலைப் படம் சொல்கிறது!!

* * *

வரும் 7ந்தேதி முதல் சென்னையில் நடக்கவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவுக்கு வர இருக்கும் 40 நாட்டுப் படங்களில் ஒன்றிரண்டு இவை.

* * *

தெற்கும் வடக்கும்



சர்வதேச திரைப்பட விழாவுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களில் 'பாவமன்னிப்பு'ம் ஒன்று. அப்படத்தின் தயாரிப்பாளரும் டைரக்டருமான ஏ. பீம்சிங், வடநாட்டுப் பிரபல டைரக்டரான சாந்தாராமுடன் சந்தித்து உரையாடும் காட்சி. வெள்ளி விழாப படங்கள் இரண்டை ஓராண்டிலேயே தந்தவர் திரு.பீம்சிங்! இந்தியத்துணைக்கண்டத்திலேயே இப்பெருமையைப் பெற்றவர் நமது நண்பர் என்பதில் நமக்கும் பூரிப்புத்தானே!!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12-3. வது குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6